அனுபவ வைத்தியம்

சுவடி எண் - 237

பக்கங்கள் - 58

DR. Jeyakkumar

சுவடி எண்: 237

அனுபவ வைத்தியம்

([illegible]) 30.3.93 டே 7.4.93

~~சுவடி எண்: 22~~ 206

~~அந்த கரணம் — அகஸ்தியர்~~

~~[illegible]~~

~~[illegible]~~

[illegible] 24/3/83

[illegible]

உ

சுவடி எண் : 237

சுவடி பெயர் : அனுபவ வைத்தியம்

படியெடுத்த நாள் : 30.3.93

முடித்த நாள் : 7.4.93

மொத்த பக்கங்கள் :

பொருளடக்கம் :

படியெடுத்தவர் : -

குறிப்பு :- இச்சுவடி சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது. இச்சுவடியில் முதலும் முடிவும் காணப்படவில்லை. கணக்கதிகாரத்தில் சில வற்றைப் பற்றியும், நோய்கள், மருந்துகள், புண், இன்னம்பிற மருந்துகளும் இதில் கூறப்பட்டுள்ளன.

1.	கணக்கதிகாரம்	1-3
2.	சோகை பாண்டு வாய்வுக்கு மருந்து	3
3.	காது இசிவுக்கு மருந்து	3
4.	சூலத்துக்குப் புகை	4
5.	பல்லில் புழு விழ	4
6.	ஒருதலை வலிக்கி	4
7.	அண்ட வாய்வுக்கும் சோகைக்கும் மருந்து	4-5
8.	கோரக்கருடைய சூரணாதி	5
9.	கிரந்தி இரணத்துக்கு	6-7
10.	கிரந்தி இரணத்துக்கு எண்ணெய்	7
11.	சிறுபுண்கள், கிரந்தி கரப்பனுக்கு	7-8
12.	மேக சஞ்சீவி எண்ணெய் சகல மேகத்துக்கும்	8-9
13.	மேகத்தெண்ணெய்	9
14.	சகல மேகத்துக்கும் 〃	10
15.	கணை எண்ணெய்	11
16.	சகல விப்புருதிக்கு மருந்து	12
17.	பழத்தெண்ணெய்	12
18.	கெர்ப்ப நோய்க்கி எண்ணெய்	12
19.	இரத்த காசத்துக்கு	13
20.	சோகை ரோகத்துக்கு எண்ணெய்	13.

௨௧.	ஆந்திர வாய்வுக்கு எண்ணெய்	14
௨௨	வலி குன்மத்துக்கு நெய்	14
௨௩.	இன்னமொரு அருக்கம்	15
௨௪	சக்தி குன்மத்துக்கு கஷாயம்	15
௨௫	கலிங்காதி எண்ணெய்	15-16
௨௬.	தெண்ட வாய்வுக்கு எண்ணெய்	16
௨௭	சகல வாய்வுக்கு அஞ்சுபுக்கட்டு	17
௨௮	லிங்கக் குழம்பு	17
௨௯	அகத்தியர் குழம்பு	17
30.	காமாலைக்கு மருந்து	18
31.	காணாக் கண்ணுக்கு	18
32	நிலவாகைச் சூரணம்	18
33.	தாளிச பத்திரி சூரணம்	19
34	வல்லாரை சூரணம்	19
35.	நீரில் சீயும், வெள்ளைப் புண்ணும் விழுந்தால் கருநொச்சி	௨௦
36.	எலிகடிக்கு மருந்து	௨௦
37.	குன்மத்துக்கு தேங்காய் லேகியம்	௨௧
38.	இருமலுக்கு லேகியம்	௨௧
39.	கண்டங்கத்திரி லேகியம்	௨௨
40.	சிந்தாதி லேகியம்	௨௨ - 23

41.	மகா வில்வாதி லேகியம்	24
42.	கடுஞ்[illegible] லேகியம்	25
43.	கப லேகியம்	26
44.	கரிசாலை லேகியம்	27-28
45.	அஸ்வகெந்தி ராட்சத வாதி தயிலம்	28
46.	தலை முழுகத் தயிலம்	29
47	சிரசு நோய்க்கு சந்தனாதி தயிலம்	29-30
48.	பீனிசம் 8-க்கும் எண்ணெய்	31
49.	பீனிசத்துக்குத் தைலம்	31
50.	கொம்பரக்குத் தைலம்	32
51.	கொம்பரக்குத் தைலம் - 2	33
52.	பொன்னாங்காணித் தைலம்	33
53.	குமரித் தைலம்	34
54	பித்த பீனிசத்துக்கு நெய்	34-35
55.	பஞ்ச தீபாக்கினி லேகியம்	35
56.	வெட்டை விழுந்தால் மருந்து	36
57.	திரு பூபதி சூரணம்	36
58.	நீர்க்கட்டுக்கு அநுபானம்	37
59.		

59.	நீர்பிழிவுக்கு அனுபானம்	37
60.	ஒரண்டத்துக்கு வேது	37
61.	சூதக வலிக்கி	38
62.	கன்ன ரோகத்துக்குத் தயிலம்	39
63.	கெண்டை மகோதரத்துக்கு	39-40
64	பொன்னாங்காணிக் கிருதம்	40
65	தூதுவளைக் கிருதம்	41
66	கண்டாங் கத்திரி கிருதம்	42
67.	பாண்டுவுக்கு மண்டூர செந்தூரம்	42
68	அண்ட வாதத்துக்கு	43
69	பாஷாணக் கட்டு	43
70	இரச பதங்கம்	43-44
71	வெள்வங்க பற்பம்	44
72	தாளக பற்பம்	44
73.	நாக பற்பம்	45
74	சீன பற்பம்	45
75	வெடியுப்பு பற்பம்	46
76	கல்லுப்பு பற்பம்	46
78	ரசக்கட்டு மார்க்கம்	46
79	அத்தி தோஷ, சன்னிக்கு —	46
80	படிக்கார பற்பம்	47

81.	காரீய பற்பம்	47
82.	காந்த பற்பம்	47
83.	வல்லாரைக் கிருதம்	48
84	கரப்பானுக்கு எண்ணெய்	48-49
85.	வாதத்துக்கு மேல் துவள்ளயாட எண்ணெய்	49
86.	சன்னிக்கு மணோசிலை எண்ணெய்	49
87	சன்னி 18-க்கும் தைலம்	50
88.	வெள்ளை பாசாணச் சுத்தி	50-51
89	வீர சுத்தி - பூர சுத்தி முறைகள்	51-52
90	கண்டமாலை விப்புருதிக்கு	52
91.	பெரும்பாட்டுக்கு மருந்து (89)	53
92.	சூட்டுக்கு	53
93.	பெரிய மேகத் தெண்ணெய்	53-54
94.	சிலேப்பனைக் கிருதம்	57
95.	மேனாதிச் சூரணம்	58
96.	திப்பிலி இரசாயனம்	58
~~97.~~		

சுவடி எண்: ௨37

அநுபவ வைத்தியம்

கணக்கதிகாரம்:-

1. ஹரி ஓம் . நன்றாக . குருவாழ்க . குருவே துணை .

கணக்கதிகாரம்:-

தினை நெல்லிடை வீசம். வீசம் கொண்டது பிளவு . பிளவு ௨ கொண்டது குன்றி. குன்றி ௨ கொண்டது மஞ்சாடி. மஞ்சாடி 5 கொண்டது கால் கழஞ்சு. கால் கழஞ்சு 4 கொண்டது ~~கொ~~ ~~கொண்டது~~ ஒரு கழஞ்சு. யென்ற வாறு. 10 வி யென்ற வாறு. கழஞ்சு வ கொண்டது கைசா. கைசா ரு கொண்டது பலம். பலம் 100 கொண்டது. பாரம் யென்ற வாறு.

ஆ. நாழி நெல்லிப்பலம் 17. என்று. நாழி மணலுக்கு பலம் உய யென்றும். நாழி நெல்லுக்குப் பலம் ~~[illegible]~~ என்றும், நாழி அரிசிக்குப் பலம் 10

௨. யென்றும், நாழி உப்புக்குப் பலம் 16 யென்றும், சொல்லப்படும் என்றவாறு. நாழி பயறு யச சுஅள நாழி. நாழி அவரைக் கொண்டது சுஅள.

நாழிகைக்கு ய௨௬அள — யென்று சொல்லப்
படும் என்றவாறும்.

ஆ. கண்ணிமை ௨ கொண்டது கைநொடி. கை
நொடி ௨ கொண்டது மாத்திரை. மாத்திரை ௨
கொண்டது குரு. குரு ௨ கொண்டது உயிர்.
உயிர் ௬(6) கொண்டது சணிகம். சணிகம்
௬௰(60) கொண்டது நாழிகை யென்றவாறு.

3. நாழிகை 7 கொண்டது சாமம். சாமம் ௪(4)
கொண்டது பொழுது. பொழுது இரண்டு
கொண்டது நாள். நாள் 30 கொண்டது
மாதம். மாதம் 1௨ கொண்டது வருசம்
என்றவாறும்.

ஆ. அன்னைக்கு மனிதர்க்கு வயது 100. பசுவுக்கு
எருதுக்கு வயது ௨0. யெருமைக்கடாவுக்கு
வயது 30. யென்றவாறு. ஒட்டகத்துக்கு வயது
73. என்றவாறு. எட்டுப் பலம் செம்பிலே ரண்டு
பலம் ஈயமிட்டுருக்க வெண்கலமாம். ஏழுறைப்
4. பலம் செம்பிலே மூன்று பலம் துத்தம் கூட்டுருக்க
பித்தளையாமென்றவாறு. அணுவு 8 கொண்டது
கதிர்த்துகள். கதிர்த்துகள் 8 கொண்டது
~~பஞ்சிறகுகள்~~ .. பஞ்சிறகுகள். பஞ்சிறகுகள் 8
கொண்டது மயிர்முனை. மயிர்முனை 8
கொண்டது. நுண்மணல். நுண்மணல் 8
அ. கொண்டது. சிறுகடுகு. சிறுகடுகு 8
கொண்டது எள்ளு. எள்ளு 8 கொண்டது.

நெல்லு. நெல்லு 8 கொண்டது விரல்.
விரல் 12 கொண்டது சாண். சாண் 2 கொண்டது
முழம். முழம் 2 கொண்டது சிறுகோல்.
சிறுகோல் 4 கொண்டது.

5. ஜாதி ஓம் நன்றாக. குருவெர்க்க. குருகோத்துணை
அன - சோகை பாண்டு வாய்வுக்கு மருந்து.

ஓமம் பலம் 5 [1750 கி] கையாந்தகரைச் சாறு [1000 மிலி] வாங்கி
அரைப்படி சாற்றில் அந்த ஓமத்தை போட்டு 7 நாள்
நிலைபுடம் வைத்து, எடுத்துப் பின் ஆவின்
கோசலத்தில் நாலு படி இந்த சிந்தட்டி, ஊறப்போட்டு
முன்னீர் விட்டுப் பிசறி, இரண்டும் உலர்த்தி
வஸ்திரகாயம், செய்து தினம் காலையிலே ஒருவிராகன்
கூட்டி, நேரம் வெருகடிப் பிரமாணமாக 12 நாள்
கொள்ளத் தீரும் வியாதி காமாலை சோகை,
அ. விக்கல், வாய்வு, குன்மம், இவை தீரும்.
கிராமம் செய்யும்.

காது இசிவுக்கு மருந்து:-

குறிஞ்சாவிலைச் சாறு, அமுக்கறைச் சாறு,
நல்லெண்ணெய் வகைக்கு படி ௫ [லிட்டர்]. கருஞ்சீரகம்.
மிளகு, கடல்நுரை, வலம்புரிக்காய், கஸ்தூரி
மஞ்சள், இவையெல்லாம் கல்வத்தில் அரைத்து
முன் சாறும் யெண்ணையிலப் போட்டுக் காய்ச்சி
மெழுகு பதமாகக் காய்ச்சி காதில் மூன்று நாள்
6. ஒரு பொழுது விட்டு வரவும் குணமாகும்.

மூலத்துக்குப் புகை:-

பெரண்டையை அரைத்து காடித்தண்ணீரில் கலக்கி ஒரு பாண்டத்திலிட்டு ஒரு செங்கலைச் சிறுசாய் எருத்து பழுக்கக் காய்ச்சி யந்த நீரில் போட்டு இந்த மூலத்துக்குப் புகை காட்டவும். இந்தபடி மூன்றுநாள் காட்ட புற மூலக்கடுப்பு மாறும்.

அ பல்லில் புழு விழ:-

சிறுபூளை வேர், கண்டங்கத்திரி முத்தின காய் விதையை இவை இரண்டும் சமன் கொண்டு மையாக அரைத்து எண்ணெயில் கலக்கி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து இரண்டு வேளையும் மூன்று நாளைக்கு வாயினுள் உமிழ்ந்து கொப்பளிக்கவும். பல்லிலே இருக்கிற புழுக்களெல்லாம் போகும்.

ஒருதலை வலிக்கு:-

வெள்ளுள்ளி, எருக்கட்டை பூண்டு, சுக்கு, குப்பைமேனி, கருப்புக்கட்டி, முலைப் பாலைச் சேர்த்து இடித்து துணியிலிட்டு காதில் பிழியவும் தீரும். / 7, 8, 9, 10 ஆகிய எண்ணுள்ள தலைகள் எழுதப் பட வில்லை.

11. அண்ட வாய்வுக்கும், சோகைக்கும் மருந்து:-

சாரணை வேர், கொளிஞ்சி வேர், கருந்தும்பை வேர், கழற்சி வேர், சுண்டை வேர், காட்டு முருங்கைப் பட்டை வகைக்குப் பலம் 1 (35 கிராம்), வெள்ளெருக்கன் வேர், பலம் ½ (17 கிராம்), சாவிகம் வேர் பலம் ½ (17 கிராம்), கருஞ்சீரகம், திப்பலி, ரோகணி, வாயுவிடங்க அரிசி,

மல்லிகை, கார்போகரிசி, அரத்தை, பூதவிருக்ஷம்,
மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், நாகப்பூ, வாய்வி
அ. ளங்கம், நாய்வேளை விதை, ஓமம், சுக்கு
இலவங்கப்பட்டை, சீரகம், வகைக்கு பலம் 1 [17 கிராம்],
இதுவெல்லாம் மைதாபோல சூரணித்து காட்டுமருந்தும்
சூரணித்து சரிசமன் கொண்டு வெருகடிப்பிரமாணம் [1 கிராம்]
வெந்நீரில் கொள்ள தீரும் வியாதி அண்ட
வாதம், அண்டவாயு, ?செக்கட்டு உஷ்ண
வாய்வு இவை தீரும்.

12. கோரக்கருடைய சூரணாதி:-

தாதுர்ணா, விலாமிச்சம், காவிளை, நெல்லி,
அமுக்கிரா, சந்தனம், அருகன்வேர், சீந்தில்
வகைக்கு பலம் 10 [350 கிராம்]. இடித்துச் சலம் ~~அஞ்பது~~ ஐம்பது ~~படிக்கு~~
படிவிட்டு இரண்டு நாளில் ஒருபடி
யாகக் காச்சி ஆவின் பால் படி 1 [1400 மிலி]. சீனி பலம் 10 [350 கிராம்],
இவையெல்லாம் சேர்த்து குழம்பாகக் காச்சி..
அ. வேர்க்கொம்பு, திப்பலி, மிளகு, கிராம்பு, சாதிக்காய்,
சாதிபத்திரி, சடாமாஞ்சில், நெல்லி, அதிமதுரம், வெல்லம்,
சீரகம், இலவங்கம், அபின், சிறுநாகம், கசகசா,
தாளிசம், ஓமம், வால்மிளகு, அரத்தை, அக்கரா
-காரம், கோஷ்டம், வகைக்கு பலம் 1 [35 கிராம்], இவை
யெல்லாம் தனித்தனியாக இளவறுப்பாக வறுத்துப்
பொடிபண்ணி விபூதி போல ~~அடி~~ பொடித்துக் கொண்டு
13. கோரக்கர் மூலிகை 10 [350] பலம் வாங்கி சுத்தி
சலத்தில் ஊறவைத்து சல்லடை சீலையில்
போட்டு மிகுந்த தண்ணீரில் சுத்தி செய்து

பின்னெடுத்து பசுவின் பால் விட்டு நிழலுலர்த்தி
பொன்னிறம் போல வறுத்துச் சூரணித்து பலம் 15 (525 கி)
ஆவின் நெய் படி 1 (700 மிலி) விட்டு யாவையெல்லாம் முன்
அ. பாகில் சேர்த்து கிண்டி லேகிய பதமாக கிண்டி
யெடுத்து ஒரு கலத்தில் வைத்து கணேச பூசை
செய்து நிதம் கழஞ்சியிடை லேகியம் கொள்ள
நீரிழிவு, பெரும்பாடு, காசம், பித்தநோய், பயித்தியம்
பிரமியம், கிராணி, வயிற்றுக்குன்மம், சயம், திவலை
அறிவுண்டாம். வசீகரமுண்டாம். பொன்னிற
14. மேனி போலாம். தாது விர்த்தி (ஜெயமுண்டாகும்) தரும். இச்சம்,
போகம் செய்ய விந்து கட்டும். பின் நெல்லி,
மிளகு, மஞ்சள், வேப்பம் பருப்பு, கடுக்காய்,
~~அஞ்சும்~~ (ஐந்தும்) சமனாக கூட்டி அரைத்து ஆவின்
பாலில் கொதிப்பித்து சிரசில் தேய்த்து, சருவலம்
விட்டு முழுகவும். நல்லெண்ணெய் புளிவிடவும்.
நியமம்.

15. <u>கிராந்தி ரணத்துக்கு:—</u>
கொடிக்கள்ளிப் பட்டைச் சார் படி 1 (1400 மிலி), குப்பமேனிச்
சார் படி 1 (1400 மிலி), ~~பிரா~~ வெள்காயச் சாறு படி 1 (1400 மிலி), கெருடன்
கோவைக் கிழங்குச் சார் படி 4 (5600 மிலி). பறங்கிப் பட்டை
பலம் 1, கருஞ்சீரகம் பலம் கி, கஸ்தூரி மஞ்சள்
பலம் கால், இவையெல்லாம் முன் சாற்றாலரைத்து
விளக்கெண்ணெய் படி இரண்டு விட்டு அதில் இ
போட்டுக் கரைத்து அடுப்பேற்றிப் பதத்தில் வடித்து
நேரம் கால் (350 மிலி) படி வீதமாக மூன்று நாள் சாப்பாடு

அ. 6 நாள் பத்தியம். உப்பு, புளி ஒன்றுமாகாது.

~~அ. இன்னம் கிரந்தி ரணத்துக்கு எண்ணெய்:—~~

ஏழாம் நாள் எண்ணெயிட்டு முழுகி. உப்பு, புளி கூட்டவும். சகல ரணம், தோல் படிப்பு, இதுகள் தீரும். சிவமயம்.

<u>இன்னம் கிரந்தி ரணத்துக்கு எண்ணெய்:—</u>

16\. சம்பகம் குப்பைசார், தழுதாழைசார், கழுதைத்திசார், கொடிகள்ளிச்சார், கருநொச்சிச்சார், ஈ.ரவெங்காயச்சார், வெள்ளைக்கி படி 1 [1400 மி], விளக்கெண்ணெய் படி ஐ, கொடுட்டன் கிழங்கு பலம் 8 [280 கி], பரங்கிப்பட்டை பலம் 4 [140 கி], கஸ்தூரி மஞ்சள் பலம் 1 [35 கிராம்], கருஞ்சீரகம் பலம் 1 [35 கி], கடுகுரோகணி பலம் 1 [35 கிராம்], செங்கத்தாரிப்பட்டை பலம் 1 [35 கிராம்], இவையெல்லாம் முன் சாற்றில் அரைத்து எண்ணெயில் போட்டுப் பதத்தில் வடித்து. <u>மாகாணி படி வீதம்</u> மூன்று நாள் சாப்பிட்டு 6 நாள் பத்தியம்

அ. 7ம் நாள் விளக்கெண்ணெய் விட்டு முழுகி உப்பு, புளி, கூட்டிக் கொள்ளவும். தோல் ரணம், மேகத்தடிப்பு, கிரந்தி, வாய்வுக்கிரந்தி, தோலை யாதுவெல்லாம் தீரும். சிவமயம்.

17 <u>இன்னம் சிறு புண்கள், கிரந்தி, கரப்பானுக்கு:—</u>

விளக்கெண்ணெய் படி 1, இளநீர் படி 1, கல்நார் வராகனிடை 5 [21 கிராம்], அதிமதுரம் வராகனிடை 5 [21 கிராம்], வாய்விளங்கம் வராகனிடை 5 [21 கிராம்]. இது மூன்றும் இளநீர் விட்டரைத்து எண்ணெயில் கலக்கி மெழுகு பதமாக காய்ச்சி பின்பு ரசகற்பூரம்,

அ விராகனெடை (வராகன்) 5, முலைப்பாலில் சுருக்குக் கொடுத்து
அரைத்து எண்ணெயில் கலக்கிக் கொண்டு அரைக்
கால் படிவிதம் மூன்று நாள் கொடுத்து 6 நாள்
பத்தியம். ஏழாம் நாள் விளக்கெண்ணெயிட்டுத்
தலை முழுகி உப்பு, புளி கூட்டவும். இதுக்கு
தீரும் வியாதி கரப்பன் கிரந்தி, அரையாப்பு,
மேகத்தடிப்பு, நீர்த்தடிப்பு, வெள்ளை விழுதல்,
இதுவெல்லாம் தீரும்.

18. <u>மேக சஞ்சீவி எண்ணெய் சகல மேகத்துக்கும்</u>

கொடிவேலி வேர்ப்பட்டை, மாவிலிங்கம் பட்டை,
எருக்கன் வேர் பட்டை, சிவனார் வேம்பு,
சங்கன் வேர் பட்டை, சங்கங்குப்பி வேர்ப்
பட்டை, வெள்ளறுகு சமூலம், வெள்ளைச் சாரணை
வேர், வகைக்குப் பலம் 1, துளசிச் சாறு, சிறுசெருப்
படைச் சாறு, சிறுகுறிஞ்சான் சாறு, சங்கங்குப்பிச்
அ சாறு, கழுதை லத்திச் சாறு வகைக்குப் படி 4. சுக்கு,
மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, தேசாவரம்,
அக்கராகாரம், கோஷ்டம், கொத்தமல்லி,
சன்னலவங்கம், சீரகம், கருஞ்சீரகம், திப்பலி,
ஓமம், தாளிச பத்திரி, கிராம்பு, சிற்றரத்தை,
வகைக்கு கழஞ்சி 1இ, பறங்கிப்பட்டை பலம் 1,
கடை மருந்தையும், காட்டு மருந்தையும் நய்ய
19. யிடித்து முன் சாற்றாலரைத்து விளக்கெண்ணெய்
படி-2 விட்டு இவையெல்லாம் அதில் போட்டு
முன் சாறும் கூட விட்டுக் காய்ச்சி அரைத்திட்டமா

காய்ந்த பிறகு மூன்று வராகனெடை இரசகர்
பூரம், முலைப்பாலில் சுருக்கு கொடுத்து கூட்டி
போட்டு மெழுகு பதமாக்கக் கச்சி பதத்தில்
நல்லவெல்லம் ஒரு பலம் கூட்டிப் போட்டு இடி
அ. கட்டி இருத்துக் கொண்டு கணேசன் பூசை
செய்து மூன்று நாள் கொடுத்து 6- நாள் பத்தியம்.
இரைக வடுக்கண்டு- ௰- படி இடம் சாப்பிடவும்.
மூன்று நாளைக்கு உப்பு ஆகாது. மறுமூன்று
நாளைக்கு உப்பு வறுத்துக் கூட்டலாம்.
ஏழாம்நாள் விளக்கெண்ணெய் விட்டு தலை
முழுகி பத்தியம் முறிக்கவும். இதுக்குத் தீரும்
20. வியாதி மேகம், வாய்க்கிரந்தி, சூலை, விசப்
புற்று, கன்னிப்பூக்கிரந்தி, மேகத்தடிப்பு, புண்
புரைகள், அரையாப்பு, முடக்குச் சூலை, பவுத்தி
ரம், கைகால் உதறல், தந்த சூலை யாதுவெல்லாம்
தீரும். இராமசெயம்.

அ. <u>மேகத்தெண்ணெய் —</u>

நல்லெண்ணெய் படி -1, ஆவின் நெய் படி -1,
சித்திர மூலவேர் பலம் -1, ஆவின் நெய்யாலரைத்து
எண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி மெழுகு
பதமாக வடித்து கரண்டி நிறை கொள்ள மேகம்
குறிவெடிப்பு, விசப்புற்று, கிரந்தி, உள்ளுளைந்த
நாவாய்-நாற்றம், சூலை, வெடி ரணங்கள், மேகத்
தடிப்பு, இதுகள் தீரும். பத்தியம் 7. நாளைக்கு.
ஒன்றுமாகாது.

௨௧. சகல மேகத்துக்கும்:—

கோவைச்சாறு, காணிச்சாறு, வல்லாரைச்சாறு, செருப்படிச் சாறு, ஆனை நெருஞ்சிச் சாறு, சிறுகீரைத் தண்டுச் சாறு, அரசம் பட்டைச் சாறு, ~~அத்தி பட்டைச் சாறு~~, அத்தித் தோல் படி - இ, ஆமணக்கு எண்ணெய் படி முக்கால், எள்ளெண்ணெய் படி ஒரு இவையெல்லாம் சட்டியில் விட்டு, சாதிக்காய்,
அ. சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, செண்பகப்பூ, கண்டாத்திரிப்பூ, சிறுக்காப்பூ, ஏலம், கோரோசனை வகை - ௰, கழஞ்சியை ஆவின்பாலிலட்டு வெண்ணையாய்ப் போட்டுக் கரைத்து சித்திரை மூல வேர்ப்பட்டை பலம் ௨, அரைத்துக் கூட்டிப் போட்டு அடுப்பேத்தி மெழுகு
௨௨. பதமாக காய்ச்சி கலசத்தில் வடித்து விட்டு, கல்கண்டு பலம் - ௨, கூட்டிப் போட்டு எண்ணெய் கரண்டி நிறை கொள்ள தீரும் வியாதி மேகத் தடிப்பு, ரணக்கிரந்தி, வேகப்புத்து, அதிகிரந்தி, சூலைப்பிடிப்பு, மேகம், ஊறல் சொறி, சிரங்கு, பிரமேகம் இதுவெல்லாம் தீரும். பத்தியம்
அ. உப்பு, புளி இதுவெல்லாம் ௫ - நாளைக்கி ஆகாது. மறு நாலு நாளை உப்பு வறுத்து கூட்டாது. எண்ணெய் ௫ - நாளைக்கி சாப்பிடவும். ஒன்பதாம் நாளானால் எண்ணெய் தேய்த்து முழுகி யெல்லாம் கூட்டிக்கொள்ளவும். இருக்க தண்ணி.

23. கணை எண்ணெய்:— (ஆமணக்கு)
கொட்டை யெண்ணெய் படி-1, கையான்சார், கரணிச்சார், குமரிச்சார், ர. நெல்லிச்சார், கோவைச்சார், புளியாரைச்சார், கற்பூரவள்ளிச் சார், வகை ஒன்றுக்கு சார் படி-வ, எண்ணெயில் கடை வார்த்து, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடக சிங்கி, அக்கராகாரம், கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், வெந்தயம், சன்ன லவங்க பட்டை, லவங்க பத்திரி,

24. வெள்ளுள்ளி வகை ஒன்றுக்கு கழஞ்சி நிறை வாங்கி ஆவின் பால் விட்டு இவையெல்லாம் அரைத்து எண்ணெயில் கரைத்து முன் சாறெல்லாம் விட்டு அடுப்பேற்றி மெழுகு பதமாக் காய்ச்சி வடிகொண்டு கல்கத்துள்ளே விட்டு, கோரோசனை, குங்குமப்பூ, சாதிக் காய், இவை மூன்றும் கழஞ்சி நிறைவாங்கி பொடித்திட்டு நுணுக்கி யெண்ணெயில் போட்டு கழஞ்சி நிறை கொள்ள தீரும் வியாதி —

25. கணை, வெட்டை, கணைச்சுரங்கள், மந்தம், உப்புசங்கள், உருது கணங்கள், கெர்ப வெட்டை, கணைப் பாண்டு, வெளுத்த தேகம், சிவத்தல், விடாத சுடு, இணைர்ந்த உஷ்ணம், உணர்ந்த கணை, உடல் காந்தல், வாய் நாற்றம். இவையெல்லாம் குணமாகும். சிவமயம்.

அ. சகல விஷபுருதிக்கு மருந்து :-

சித்திரை மூலம் வேர்ப்பட்டை தூள் பொடி செய்து கோழிமுட்டை (செங்கரு) ... முன் பொடியால் ~~வெருகடி~~ வெருகடி பொடியைக் கூடப் போட்டு வறுத்து நிதம் இப்படி 3. நாள் கொடுத்து ~~ஆறாம்~~ ஆறு நாள் பத்தியம் காக்கவும்.

௨௬. பழத்தெண்ணெய் :-

பழச்சாறு (1400 மிலி) படி-1, முத்தெண்ணெய் (1400 மிலி) படி-1, குமரிச்சார் (1400 மிலி) படி-1, கடுக்காய் பலம்-2 (70 கிராம்), முன் சாற்றிலரைத்து எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்து கலசத்தில் வார்த்து கால் சேர் நிதம் கொள்ள பேதியாம். பித்த மேகம், கிரந்தி உஷ்ணம், உடலெரிவு, வயிற்றில் கெண்டை வலி, வாய்வு யிவையெல்லாம் தீரும். மேழுக்கு வெந்நீர் விடவும்.

அ. கெர்ப்ப நோய்க்கு எண்ணெய் :-

விளிம்பிச்சார் படி-1, ஆவின் நெய் படி-1, முத்தெண்ணெய் படி-1, இது மூன்றும் கூட வார்த்து திரிகடுகு, வசம்பு, ஏ.நுன்னி, கோஷ்டம், இலவங்கப்பட்டை, வெள்ளுள்ளி வகைக்கு பலம் ¼ (4). இதுவை ஆவின் பாலாலரைத்து நெய்யாலே கரைத்து விட்டு அடுப்பேற்றி மெழுகு பதமாக எடுத்து வடித்துக் கொண்டு மூன்று நாளைக்கு கால் சேர் நிதம்

௨௭. கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி தள்ளு. வயிற்றில் கெர்ப்ப வாய்வு, சூதக சூடுவலி, வயிற்றில் புழுக்கள் விழும்.

வாத சூலை, இசிவு, சந்திப்பு யாவையெல்லாந் தீரும்.
...சா நாள் பத்தியம் முறிக்கவும். / சிவமயம்.

அ. இரத்த காசத்துக்கு:-

திலை சுட்ட சாம்பல், ஏன்னிப் பொடி செய்து இரண்டும் சமன் கூட்டி கலந்து கொண்டு (1 நாள்) வேருக்கு புளியமாணமாக இரண்டு வேளைக்கும் ... நாள் கொள்ளத் தீரும். வாய்வு பதார்த்தம் தள்ளு. ... இ வற்றி தீர்ந்துவிடும். 3/4 (210 நாள்) ஒரு சேர்வதனாக பத்து நாள்

28. கொள்ளை கவுசை, பெருவயிறு, வாய்வுக் கட்டு, கெண்டை ——, மகோதரம், குன்மம் 18, வாதம், நீர்ப்பவன, நீர்ப்ப வாய்வு, சூலைக்கட்டு, வயிற்றில் (வயாற்றில்) பூச்சிகள் இவை தீரும். பத்தியம்.

அ சோகை ரோகத்துக்கு எண்ணெய்:-

கடுக்காய், கீழாநெல்லி, சமூலமும் பலம் 10. இடித்து இருணித் தண்ணீரில் கரைத்து இருநாழியாகக் காய்ச்சி வடித்து கருஞ்சீரகம், செண்பகப்பூ, (ஏலம்) சுக்கு, திப்பிலி, சிவதைவேர், சீரகம், கடுக்காய், மஞ்சள், வகைக்கு கழஞ்சு 6. அரைத்து பசுவின் நெய் படி 2, கூட விட்டு கரைத்து அதைப் பெத்தி கருகு பதமாகக் காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு

29. ஒரு திருவேள்துப்பு கொள்ள காமாலை, சோகை, மேல் வீக்கம், அக்கினி மந்தம், உஷ்ணம், இவை தீரும். பத்தியம். வாய்வு பதார்த்தமாகாது. 12 - நாளைக்கு மெல்லின சாப்பாடாகாது.

எண்ணெய் கால்மண்டலம் சாப்பிடவும். ~~அஞ்சு~~ ஐந்து நாளைக்கு உப்பு, புளி யொன்றுமாகாது. இவ்வயம்.

அ. ஆந்திர வாய்வுக்கு எண்ணெய் :—

செருப்படை சமூலம் கொண்டுவந்து பலம் 8-ம் இடித்து இரணித்த தண்ணீரிலே போட்டு நாசியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு இந்துப்பு, மிளகு, திப்பலி, வகைக்கு பலம்-1 (35 கி), இரண்டுதொறு மஞ்சள், சுக்கு பலம் -1 (35 கி), யிவை இளவறுத்து சூரணித்து முன் கிசாயத்தில் விட்டு விளக்
30 கெண்ணெய் படி-1 (1400 மி), கூடச் சேர்த்து அருப்பேத்தி மெழுகு பதமாக வடித்து நித்தம் ஒரு துட்டிடை சாப்பிட ஏழுநாள் கொள்ள பத்தியம். உப்பு, புளி புகையிலை, எள்ளு, கடுகு, அவ பத்தியம். 12 நாளைக்கு ஆகாது. அதுக்கு மேல் தலை முழுகிடத்து சேர்த்துக் கொள்ளவும்.

அ. வலிகுன்மத்துக்கு நெய் :—

தேங்காய் உடைத்துத் திருகி ஒரு படி பாலுண்டாக்கி பெருங்காயம், இந்துப்பு, வகைக்கு பலம் ½ (17 கிராம்), திப்பலி, சுக்கு, வெள்ளுள்ளி, வில்வ பத்திரி வேர், தூதுவளை வேர், வகைக்கு பலம் -1 (35 கிராம்), இவையெல்லாம் முன் பாலில் அரைத்துப் போட்டு கரைத்து அருப்பேத்தி மஞ்சள் நிறமாகக் காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு ஒரு துட்டிடை 7. நாள் குடிக்கவும்.

31. இன்னமொரு சுருக்கம்:-

திப்பிலி, கடுகு, சுக்கு, வெள்ளுள்ளி, ஓமம், இது ஐந்தும் சமன் எடை கூட்டி உவருமண் தண்ணீரில்க் கரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். மூன்று நாள் கொள்ள ஆறு நாள் பத்தியம். வலிகுன்மம், வயிற்றுவலி, வாய்வு, பொருமல், இவை தீரும்.

அ. சத்தி குன்மத்துக்கு கியாழம்:-

அரத்தை பலம்-1, பிரப்பங் கிழங்கு இது இரண்டு மருந்தையும் சட்டியில் போட்டு நாழுபடி தண்ணீர் விட்டு 8-ஒன்றாக்கி 6-வேளைக்கு குடிக்கவும். பத்தியம். புளியும், புகையிலையையும் தள்ளு. உப்பு பசுநெய் கூட்டவும். ஏழு நாள் தலை முழுகி வரவும். சத்தி குன்மம் தீரும்.

32. கலிங்காதி எண்ணெய்:-

(2) தும்மட்டிச் சார் படி-௨ (உழக்கு), ஆவின் நீர் படி-௨ (உழக்கு), வெள்ளாட்டு நீர் படி-௨ (உழக்கு), ஆமணக் கெண்ணெய் படி-௨ (உழக்கு), இது நாலும் கூட வார்த்து கடுக்காய், கடுகுரோகிணி, வாய்விளங்கம், திரிகடுகு, ஏலம், இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, சவட்டுப்பு, நவச்சாரம், ஏவச்சாரம், காரம், அப்பளக்காரம், வால்மிளகு, ஆனைத்திப்பிலி, வெள்ளுள்ளி, வகைக்கு கழஞ்சி-௩ (15 கி). நிலைவாகை, கண்டங் கத்திரி, வெண்ணைச் சாறணை, ஏலம், சத்திச் சாறணை வகைக்கு பலம் ½ (17 கி). விதமாக அரைத்துப் போட்டு

நொச்சிச் சார், மஞ்சள் சார், இஞ்சிச்சார், குமரிச்
சார், வகைக்குப் படி -1 கூட விட்டு கரைத்து
அரப்பெத்தி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து கலசத்தில்
வார்த்து நாளொன்றுக்கு அரைக்கால் சேர் வீதமாகக்
பத்துநாள் கொள்ள கணைச்சை, பெருவயிறு, வாய்வுக்
கட்டி, கெண்டை, மகோதரம், குன்மம், சூலம், வாதம்,
33. கெர்ப்பவலி, கெர்ப்பவாய்வு, சூலைக்கட்டு, வயிற்றுப்
புழுக்கள், இவை தீரும். பத்தியம் காத்து வரவும்.
ஒரு மண்டலத்துக்கு வாய்வு பதார்த்தமாகாது. உப்புப்
புளி, அரக்கீரை, வெள்ளாட்டுவத்தல், துவரை,
பாசிப்பருப்பு இது சேர்த்துக் கொள்ளலாம். (ராமச்
செயம்.

அ. ஓதண்ட வாய்வுக்கு எண்ணெய் :-

கொள்ச்சிப் பருப்பும், முடக்கொத்தானிலையும்,
கூடக்கூட்டி அரைத்து விளக்கெண்ணெயில்
போட்டு வேக வைத்து எண்ணெயை இறுத்து மூணுநாள்
இடுத்து 6-நாள் பத்தியம் இருக்கவும். அதுக்கு
வேது. கொட்டம்ராப்) காந்தை சார் படி 3/4 நல்லெண்
ணெய் படி-3/4, இரண்டும் கூடச் சேர்த்து
சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, வராகனெடை-1,
மூன்றும் பொடிசெய்து பொட்டணம் கட்டி முன்
னெண்ணெயில் வேது கொடுக்கவும். குணம்.
சிவ மயம்.

35
2 1/8

34. சகல வாய்வுக்கு அஞ்சுப்புக் கட்டு:—

வெடியுப்பு வராகனெடை – 3 [10.5 கிராம்] சுத்தி செய்து கறியுப்பு வராகனெடை – 5 [17.5 கிராம்], கல்வத்தில் போட்டு இந்துப்பு வராகனெடை – 5 [17.5 கிராம்], வளையலுப்பு வராகனெடை – 5 [17.5 கிராம்], அட்டுப்பு வராகனெடை – 5 [17.5 கிராம்], ஆக உப்புவகை – 5 [175] – [பொடி செய்து] கல்வத்தில் போட்டு நுணாச்சாறு விட்டு – 30 – தினமும் புடம் வைத்து நுணாக் குச்சியால் கிண்டி உருக்கிற பதத்தில் புடத்தை விட்டு எடுத்துக் கொள்ளவும்.



அ. லிங்கக் குழம்பு:—

சாதிலிங்கம் வராகனெடை – 4 [16.8 கிராம்], ரசகற்பூரம் வராகனெடை – 2 [8.4 கிராம்], வெங்காரம் வராகனெடை – 2 [8.4 கிராம்], 8 சித்ராமணக்கு பருப்பு வராகனெடை 2. சுக்கு வராகனெடை – 10 [42 கிராம்]. சுத்தி செய்து வாளைப்பூ பருப்பு வராகனெடை – 15, அரைப்பு சாமம் – 1, அனுபானம் மறிந்து கொடுக்கவும். இந்தக் குழம்பு செய்து கொள்ளவும். ராமசெயம்.

35. அகத்தியர் குழம்பு:—

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், பொரிகாரம், மனோசிலை, திப்பிலி, அரிதாரம், கருஞ்சீரகம், வசுக்கி வராகனெடை – 4 [16.8 கிராம்] நேர்வாளத்தோடு பொங்கி சுத்தி செய்து இதில் பேதபாதி அரைப்பு சாமம் – 2. அரைத்துக் கொள்ளவும்

காமாலைக்கு மருந்து:-

எருமைச் சாணிப் பாலில் அதிவிடைய துயரும் கூட்டி சீரகம், வெங்காரம் இரண்டும் சமன் கூட்டி அரைத்து கலக்கி மூன்று நாள் கொடுத்து 6-நாள் பத்தியம்.

காணாக்கண்ணுக்கு :-

ஒரு வீரகனை தானகத்தை வாங்கி சுத்தி செய்து பெண்ணுக்கு சேவந்ரத்தமும் ஆணுக்கு பெட்டைக் கோழி ரத்தமும், கல்லீரலும், நல்ல மீரமும், மிச்சமும், கஞ்சாங் கோரைச் சாற்றில் முன் மருந்தும் பின் மருந்தும் பொடி செய்து மருந்தெல்லாம் கூட்டிச் சேர்த்து வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் கொடுக்க தீரும்.

37. நிலவாகைச் சூரணம் :-

~~எருமைச் சாணிப் பாலில் அதிவிடைய துயரும் கூட்டி~~

சீரகம், நிலவாகை, சுக்கு, ~~[illegible]~~ வாய்விளங்கம், சோம்பு வகைக்கு ஒரு பலமாக 35கிராம் வாங்கி இரவில் ~~நிழலில்~~ உலரப் போட்டு யிடித்துச் சூரணித்து சீனிசமன் கூட்டி வெருகடிப் 1கிராம் பிரமாணமாக இருநேரம் ச-மணி..ம் கொள்ள வாய்வு பித்த நோய், பொருமல், விம்மல், சேற்றுமம். விக்கல், வாந்தி, உடம்பெரிவு, சிரங்காசம், குன்மம் 8-ம், மகோதரம், கிருமி பவள வெந்நீரில் கொள்ள யிவைகள் தீரும்.

அ. தாளிச பத்திரி சூரணம்:-

தாளிச பத்திரி பலம் -10 (350கி), திரிகடுகு, திரிபலாதி, கோஷ்டம், அக்கிராகாரம், ஆனைத்திப்பிலி, சீரகம், கொத்தமல்லி, வாயுவிளாங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மஞ்சி, சோம்பு, வால்மிளகு, லவங்கப் பட்டை, சுக்கு இவையெல்லாம் வகைக்கு பலம் -1 (35 கிராம்) இளவறுப்பாய் வறுத்து சூரணஞ் செய்து வடிகொண்டு சீனிசமன் கூட்டி பிசைந்து கொண்டு வெருகடிப் பிரமாணம் (1 கிராம்) இருநேரம் ௪௰ (40) நாள் கொள்ள, சயகாசம், ஈளை, அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, நீர்த்தாகம், பித்த வெட்டை, பித்தபாண்டு, கிராணி, அரோசியங்கள், அன்னத் தோஷம், குன்மம், வாக்கல், கைகாலெரிவு, காந்தல் இவையெல்லாம் தீரும். பத்தியம் புளி, புகையிலை தள்ளு. வெளி [illegible]

38. அ. வல்லாரை சூரணம்:-

வல்லாரை சமூலம் கொண்டு வந்து ஆவின் பாலில் போட்டு அவித்து நிழலில் உலர்த்தி சூரணித்து பலம் 10 (350 கிராம்), ஆனால் கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதி பத்திரி, திரிகடுகு, திரிபலாதி, மாசிக்காய், தாளிச பத்திரி வகைக்கு பலம்-1 (35 கிராம்), இளவறுத்து சீனி சமன் கூட்டி வெருகடிப் பிரமாணம் நெய்யிலாவது, தேனிலாவது இருநேரம் ௪௰ - நாள் கொள்ள மேகம், சரீரத்தில் காந்தல், பிரமியங்கள், உஷ்டிண ரோகம், நீர்க்கல், உடம்பெரிவு,

நீர்க்கடுப்பு, நீரெரிப்பு, கண்புகைச்சல், கண்ணெரிவு,
நீர்க்கடுப்பு, மூலை தீரும். இச்சா பத்தியம்.

39அ. **நீரிழிச்சியும் வெள்ளைப்புண்ணும் விருந்தால்**
கருநொச்சி :-

கருநொச்சிச் சாறு படி ஒ (¾ 1000 மிலி) வெள்ளைப் பசுவின் பால் படி ஒ (1000 மிலி ¾)
பழச்சாறு படி ஒ (¾ 1000 மிலி) ~~நல்~~லெண்ணெய் படி ஒ (¾ இ 1000 மிலி) மூன்றை
நாலு ஒன்றாய் விட்டுக் காய்ச்சி வெள்ளை குங்கிலியம்
1 சேர்த்துக் கல்நார் வகைக்குப் பலம் ௨ (70 கிராம்) பொடி செய்து
(குழமால்) போட்டு தைலபதம் கண்டு தண்ணீர் விட்டு
பத்து தினம் அலம்பிப் போட வெண்ணெய் ஆகும்.
அதை 10 (350 கிராம்) பலம் தண்ணீர் விட்டு வைத்துக்
கொண்டு ~~தினம்~~ (ஒரு) காசு அளவு வீதம் யாருநேரம்
. . . . பத்தியம் உப்பு புளி கூட்டவும்.
. . . .
சேர்த்துக் கொள்ளவும். தீரும். குணமாகும்.

அ. . . . செ/ அனுபவம்.

~~எலும்புக்~~ **எலிகடிக்கு மருந்து**

ஒரு பணவிடை (488 மி.கி) அதிமதுரம், வெருகன் கிழங்கு
இரண்டும் சமன் கூட்டி புழுங்கரிசி அரைத்து
ரொட்டி ஒன்று சுட்டு மூன்று நாள் தின்று அரை
நாள் பத்தியம். 7 நாள் தலை முழுகி, உப்பு,
புளி, புகையிலை எல்லாம் கூட்டிக்
கொள்ளவும்.

40 குன்மத்துக்கு தேங்காய் லேகியம்:-

இந்துப்பு வராகனெடை (உ1 கிராம்) கி, சதுரக்கள்ளிப் பாலில்
அரைத்து தேங்காய் ஒன்று வாங்கி அந்த தண்ணீரை
உடைத்து போட்டு அதில் இந்த உப்பை அடைத்து
கண்ணை மூடி, வரட்டி கொட்டி அதில் புடம்
வைத்து சுட்டு வெடித்தவுடனே தேங்காயை எடுத்து
அரைத்து புதுக்கலசத்தில் வைத்துக் கொண்டு ரண்டு
(கிராம்) கொட்டை பாக்களவு கொள்ள குன்மம், கிராணி,
அவையக் கட்டி முதலானவெல்லாம் தீரும். இச்சா
பத்தியம்.

அ. இருமலுக்கு லேகியம்:-

ஆடாதோடை சமூலம் கொண்டுவந்து நறுக்கி
உலர்த்தி சூரணம் வடிகொண்டு பலம் -10- (350 கிராம்) [illegible],
கொத்தமல்லி, அரத்தை, சுக்கு, அதிமதுரம், தாளிச
பத்திரி, இந்துப்பு, பேரரத்தை, கோஷ்டம்,
கருஞ்சீரகம், கருகோங்கணி, அதிவிடையம்,
வாலுளுவை, ஜாதிப்பூ, கிராம்பு, சிறுதேக்கு
தனிக்கு பலம் -1- (35 கி) இவைகளை வறுத்துச் சூரணித்து
வடிகொண்டு முன் மருந்தில் சமன் கூட்டி
சீனி இதில் பால் கூட்டி பசுநெய், தேன் கூட்டி
கலந்து லேகியமாக வைத்துக் கொண்டு அந்தி
சந்தி சிறு பாக்களவு கொள்ளவும். பத்தியம்
இச்சா பத்தியம். பிறத்தில் சேர்ந்த யாருமே,

குன்மெரிவு, குடல்பிரட்டல், இருகிருப்பு,
யிவையெல்லாம் தீரும்: 12 - நாள் கொள்ளவும்.

41. கண்டங்கத்திரி லேகியம்:-

கண்டங்கத்திரி தூக்கு (1.7 கி) ஒன்று கொண்டு வந்து
இடித்து தாணிநீரில் போட்டு எட்டிலொன்றாய்க்
காய்ச்சி மறு பாண்டத்திலிருத்து பனைவெல்லம்
பலம் நூற்றி... பருத்திப் பால் படி - 1, கிஷாயத்திலிட்டு
பாகு சேர்த்தில் திரிகடுகு, திரிபலாதி, வாய்விளங்
கம், ஏலம், குரோசாணி, பறங்கிப் பட்டை, சீரகம்,
நாக்குமூலம், அத்தி, திப்பிலி, கோஷ்டம்
தாளிச பத்திரி, அக்கிராகாரம், வகை பலம் - 1, (35 கிராம்)
வாங்கிச் சூரணித்துப் பாகிற் தூவி ஆவின் நெய்
படி - 1/4 (350 மி) விட்டு, தேன் படி - 1/4 (350 மி) விட்டுக் கிண்டி
மெழுகு பதமாக லேகியத்தை எடுத்து வைத்துக்
கொண்டு இரு நேரமும் சிறு பாக்களவு (5 கிராம்) பன்னிரெண்டு
42. நாள் கொள்ளத் தீரும் வியாதிகள் வாதம்,
தலைப் பாடிப்பு, கிரிவியாதி புண்கள், கர்ப்ப
வாய்வு உஷ்டிணம் நோய், பித்தம் யாவை தீரும்.
இச்சா பத்தியம்.

சிந்தாமணி லேகியம்:-

ஆறு மாதம் சென்ற காடித் தண்ணீர் படி - 10, (3500 மி)
புளித்த மோர் படி - 10, (3500 மி) இரண்டையும் கூடச் சேர்த்துப்
புளியை ஒரு தூக்குக் (1.7 கி) கொண்டு வந்து அடித்து
துப்பத் தயாரும் சரி யடை யதில் போட்டு

1400×4
5600

கொதிக்க வைத்து எட்டில் ஒன்றாகச் செய்து
வார்த்துக் கொண்டு கையான் சாறு படி-2, (2800மிலி) இஞ்சிச்
சாறு படி-1, (1400மிலி) புளிச்சாறு படி-1, (1400மிலி) நெருஞ்சிச் சாறு படி-1,
சிறுகீரைச் சாறு படி-1, (1400மிலி) செம்பைப்பூச் சாறு படி-1, (1.400மிலி)
தென்னம்பூச் சாறு படி-1, (1400மிலி) பூரானைவேர்ச் சாறு படி-1, (1400மிலி)
ஆவின் பால் படி-4, (5600மிலி) பனை வெல்லம் பலம்-10 (350கிராம்)
இது வெல்லம் கூடச் சேர்த்துக் கரைத்து விட்டு
... ~~சுக்கு~~, திரிகடுகு, ஓமம், திரிபலை, கோஷ்டம்,
மாஞ்சில், கருஞ்சீரகம், வால்மிளகு, ஏலம், கிராம்பு,
தாளிசபத்திரி, இலவங்கத் தோல், ஆனைத்திப்பிலி
வகைக்கு பலம்-1, (35கிராம்) இவை வறுத்துச் சூரணித்து
முன் பாகில் தூவி கிண்டி ஆவின் நெய் படி-1, (1400மிலி)
தேன் படி-4. (5600மிலி) கூட்டி மெழுகு பதமாக
லேகியம் செய்து இரு நேரமும் 3 கழஞ்சி (15.350கிராம்)
நிறையாக 48 நாள் கொள்ள தீரும் வியாதி
பாண்டு, பித்த வெட்டை, பித்த வாய்வு,
மயக்கம், அக்கினி மந்தம், சோகை, கிராணி,
உடம்பெரிவு, ஈளை, இரைப்பு, ...
உபசம், ஐயந்தூர் [illegible], ஓக்காளம்,
காலசந்தி யாவை தீரும். பத்தியம் இச்சாபத்தியம்.
வாய்வு பதார்த்தம் ஆகாது.

~~முக~~

அ. கோவில்வாதி லேகியம்! -

வில்வவேர் பலம் - 10 [350] கொண்டுவந்து, விளாமிச்சை
வாகைவேர், பாதிரிவேர், நன்னாரி, பெருவிளா
வேர், சித்திரமூல வேர், பேராமல்ல வேர்,
சிறுவாளா வேர், சிறுவாகை வேர், முன்னை
வேர், மொசுமொசுக்கை, கொடிவேலி, ஆகாத்தான்,
A3. வகைக்கு பலம் - 3 [105 கி] யாவையெல்லாம் இடித்து
தண்ணீரில் போட்டு எட்டொன்றாக்கி இறுத்துக்
கொண்டு குமட்டிப் பழச்சாறு, இஞ்சிச்சாறு
படி - 1 [1400 மிலி], வாட்டு சீனி சேர் - 4, ஆவின் பால்
படி - 4 [5600 மிலி], இவையெல்லாம் கரைத்து பாகு சேரும்
போது திரிகடுகு, திரிபலாதி, ஏலவங்கம்,
ஏலம், கோஷ்டம், சிறுசீரகம், வாய்விளாங்
கம், சாத்திரபேதி, தாளிசம், செண்பகப்பூ,
அக்கரா → கொத்தமல்லி, விராலிருசி,
சிறுதேக்கு, வலா, முந்திரிகை, பேரீச்சம்,
வில்வம், ... சடா மாஞ்சில், சிறுநாகம்,
நாககணம், பருத்தி, சிற்றரத்தை, இவை
இதுவரையுள்ள வகைக்கு பலம் - 1 [35 கிராம்], சூரணித்துப்
பாகில் கலக்கி பால் படி. தேன் படி - ½ [½ 700 மிலி],
ஆவின் நெய் படி - ½, விட்டு கிண்டி -
லேகியம் செய்து வைத்துக் கொண்டு
இரண்டு [5 கிராம்] வீதம் பதமாக யாரு நேரம்

12 நாள் கொள்ள தீரும் வியாதி. சுவாசகாசம்,
அரோசியங்கள், மேனிவெறி, விக்கல், பாண்டு,
வெள்ளைப்பாண்டு, . உஷ்ண . . சம், கிராணி,
கைகாலெரிவு, காந்தல், சோபை: —
தோஷம், குலை, சேத்துமம், ... சுரம்,
. . . நாற்பது, நாள் அருந்த மருந்தீடு,
அதிசாரம் . . . . யாவும் தீரும். பத்தியம்
- - - - பதார்த்தம் 48 நாளைக்கு
ஆகாது.

44. கை—ஷ்~~அண்ட~~ல லேகியம்:—

பூசணிக்காய், [illegible] 4. (5600 வரா) தோழைவாருது,
சாறு படி - 1, (1400 வரா) தென்னம்பூச் சாறு படி 1 (1400 வரா)
— — யவைகளைக் சேர்த்து சக்கரையை
சேர்த்து பாகாய் காய்ச்சி ~~[illegible]~~ சீரகம், கொத்தமல்லி
விதை, கொஷ்டம், . . ஏலம் சிட்டம்
சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதுரம், இலவங்க
- பலம் 1, (3536) இவைகளைத் சூரணித்து பாகில்
தூவி . . . கிண்டி [illegible] 1. விட்டுக் கொண்டு
போல கிண்டி தேனும் நெய்யும் சேர்த்து
லேகியஞ் செய்து புன்னைக்காயளவு விதமாக
இரு வேளை . . . . 48 நாள் கொள்ள
தீரும் வியாதி. சோகை, காமாலை, அஸ்திசுரம்,

40. அஸ்த்தி வெட்டை, பிரமியங்கள், வெள்ளை வெகுதல், விந்து நஷ்டம், பூசணங்கள், நீர்ச்சுருக்கு, இது தீரும். புகையிலை, புளி தள்ளுபடி. 8.ம் பத்திய மாகாது. தீரும் வியாதி. தெண்டாயுத பாணி துணை.

பொரு லேகியம் :-

அரசன் பட்டை, அத்திப்பட்டை, நாவல் பட்டை, கருங்காலி பட்டை, உதியம்பட்டை வகைக்கு பலம் -10 (350 கிராம்), நைய்ய யடித்து ஆணி கீறல் போட்டு [illegible]வெண்ணாக்கி பனை வெல்லம் பலம்-10 (350 கி), கரைத்து பாகு சேரில் கஞ்சாவை சுத்தி செய்து பலம் -1 (35 கி), சுக்கு, சீரகம், மிளகு, ஓமம், [illegible], கண்டங்கத்திரி, காட்டுத்திப்பிலி, சிறுநாகம், வால்மிளகு, லவங்கம், ஏலம், அதிவிடையம், கிராம்பு, திப்பலி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வகைக்கு பலம் -1 (35 கி), இவைகளைப் பொடித்துச் சூரணித்து பாகில் தூவிக் கிண்டி (நெய், தேன் படி ஆட்டு) லேகிய பதமாக எடுத்து சீசாவில் பதனம் பண்ணி [illegible] பாக்களவு கொள்ள நீங்க கிராணி வாய்வு, கடுப்பு, பாண்டு, கிராணி, உஷ்ண வாய்வு, மூலத்தின் சூடு, நீர்ச்சுருக்கு, குன்மம்-8, வலிப்பு யானை. பெலவான் தீரும். பத்தியமில்லை.

46. கரிசாலை லேகியம்:-

பொன்னாங்கண்ணி சாறு, கீழாநெல்லிச் சாறு,
நெருஞ்சிச் சாறு, சிறுகீரைச் சாறு, பொடுதலைச் சாறு,
செருப்படைச் சாறு, பழச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு,
அ. வகைக்கு படி-1 (1400 மிலி), நாவல், கருங்காலி, அத்தி,
தென்னம்பூ, வகைக்கு பலம்-5 (175 கி), நைய
இடித்துத் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாக்கி
சாதிரின் உள்ளேவைப்பு, மிளகு, மிளகரணை,
ஆலம், அமுக்கிரா, சிற்றாமுட்டி, பேராமுட்டி,
வேர் வகைக்கு பலம் - 5 (175 கி), இடித்து தண்ணீரில்
போட்டு எட்டிலொன்றாக்கி முன் கஷாயத்தில்
விட்டு பனைவெல்லம் - 8 (280 கி) (கருப்பு) கீல் வெல்லம்
பலம் - 8 (280 கி), ஆவின் பால் படிநாலு. கரைத்து
முன் கஷாயத்தில் ஒன்றாகச் சேர்த்து அடுப்
பேற்றி பாகுசேரில் சுக்கு, கிராம்பு, சாதிக்காய்
சாதிபத்திரி, ஏலம், கோரோசனை, நாகப்பூ,
கர்க்கடகசிங்கி, கோஷ்டம், அக்கிரா
காரம், அதிமதுரம், தாளிசபத்திரி, திரிகடுகு,
திரிபலாதி, வகைக்கு பலம்-1 (35 கி), சூரணித்துச்
சூரணித்து முன் பாகில் தூவி கிண்டி ஆவின்
நெய், தேன் படி வகைக்கு படி 1 (1400 மிலி) - விட்டு
கிண்டி பதமாக லேகியம் செய்து புன்னைக்
காயளவு தினமாக இரு மண்டலம் கொள்ள
வெள்ளை பாண்டுரோகம், பித்த வெட்டை,

கைகால் அசதி, சோர்தல், உடம்பெரிவு, வாந்தி
மயக்கம். தூக்கம். நீர்கடுப்பு, கிராணி, நோய்க
யிகள், இவைகள் தீரும். அது தப்பாதுயில்லை.
அஸ்வ கெந்தித் தயிலம் முடிந்தது தீரும். பத்தியம்
இச்சா பத்தியம். புளி, புகையிலை தள்ளுபடி.

48. அஸ்வ கெந்தி ராட்சத வாதித் தயிலம் :-

அஸ்வகெந்தி பலம் - 15 (525 கி), சித்திரமூட்டி பலம் 15 (525 கி),
எருக்கலம் வேர், நன்னாரி, சீந்தில், விலாமிச்சை,
கோரக்கிழங்கு, நெய்ச்சட்டி, அவிரி, நாரத்தை
துளசி, வெட்டிவேர், அயில்கட்டை, வகைக்கு பலம்-4 (140 கி),
தேவதாரம், கீழ்நாடன் பலம் - 8 (280 கி), கொடம்பாக்கு பலம் -
அ. 8 (280 கி) முன்வகை 15. நைய இடித்து தூணி நீரில் போட்டு
எட்டொன்றாக்கி எள்ளெண்ணெய் சேர் - 5 (1400 மி.லி)
தயிர் தண்ணீர் சேர் - 2½ (700 மி.லி), பால் சேர் - 5 (1400 மி.லி), திரிகடுகு,
திரிபலாதி, கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம், மரமஞ்சள்,
முச்சீரகம், புழுகு, கெந்தகம், ராமஞ்சள், ரோகிணி
செவ்வள்ளி, மச்சிலை, பூலாங்கு, கண்ணியுரல்,
49. சதகுப்பை, வேலணைப்பட்டை, இவ்வளாம் வகைக்கு
பலம் - ½ (17 கி), யிவையெல்லாம் ஆவின்பால் விட்டு
இவ்வெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி, தைலமும்
கூட்டிச் சேர்த்துக் கொதிக்கும் போது அரக்கு
கிசாயத்தை விட்டு மெழுகு பதமாக வடித்து
சின்னவர்க்கு . . . . யாரத தயிலம் முடிக்க

மேகசூலை, பதினெட்டும், பித்தவெட்டை, அக்கினி மந்தம், பாண்டுரோகம் - 8, கண்புகைச்சல், அழற்காந்தல், உடலெரிவு, சுவாசகாசம், யிவை தீரும்.
பத்தியம். புளி, புகையிலை. அவ பத்திய மாகாது.

ஆ. தலைமுழுக்கு தயிலம் :-

ஆதமணக்கன் சார், சாணிச்சார், குமரிச்சார், செவ்விளநீர், ஆவின்பால் வகைக்குப் படி - ௩ (2800 மி), வெள்ளெண்ணெய் படி - ௩ (4200 மி), அதிமதுரம், கோஷ்டம், கூவளம், கோரோசனை, பச்சிலை, பூலாங்கி, கஸ்தூரி,
50. மஞ்சள், சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கப் பத்திரி, இலவங்கப் பட்டை, திரிகடுகு, திரிபலாதி, பூஞ்சாந்து, சோம்பு, வால்மிளகு, வகைக்கு கழஞ்சு நிறை - ௩ (15 கி) ஆவின் பாலாலரைத்து எண்ணெயில் கரைத்து விட்டு அடுப்பேற்றி காலமே மாகும் போது கணபதி பூசை செய்து மெழுகு பதமாக வடித்து
அ. சூலை கண்ணெரிக் காசம், அக்கினிமலை, நேத்திர ரோகம் தெண்ணீர்தாரை, பித்தவெட்டை, தலை மயக்கம், அஸ்தி வெட்டை, பாண்டு, உடம்பெரிவு, கைகால் காந்தல், யிவையெல்லாம் தீரும்.
பத்தியம், புளி, புகை, பெண் ஆகாது. நீர்ச்சாதம் தண்ணீர் முழுக்கையும். ராமசெயம்.

51. சிரசு நோய்க்கு சந்தனாதி தயிலம் :-

வெற்காயச் சந்தனத்தின் பிடையொன்று, விலாமிச்சை, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சித்தாமுட்டி, பேராமல்லி, சித்தாமல்லி, நன்னாரி, பற்படாகம்.

வகைக்கு பலம் - 4, (14056) இவையெல்லாம் நைய இடித்து
ஒரு தாணி வெள்ளை சீலைப் போட்டுக் கட்டி 1/8
தென்னாயக் காச்சி மண்பாண்டத்தில் வடித்து
செவ்விளநீர், கரணிச்சாறு, சிறு கீரைச்சாறு வகைக்கு
படி - 2. (2800 படி) பொடுதலைச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு,
பொய்தலைச்சாறு, நெல்லிச்சாறு, தாளை விழுதுச்
சாறு வகைக்கு படி - 1, (14000 படி) எள்ளெண்ணெய், படி
32, (56000 படி) நெய் படி - 1, ஆவின்பால் படி - 4,
தேங்காய்த்தண்ணீர் படி - 2. (2800 படி) இவையெல்லாம் ஒன்றாக
விட்டு அடுப்பேற்றிக் கொதிக்கும் போது திரிகடுகு,
திரிபலை, கஸ்தூரி, அதிமதுரம், ஏலம், கிராம்பு,
52. சாதிக்காய், சாதிபத்திரி, பச்சிலை, புனல்கிழங்கு,
பூஞ்சாந்து, கிளியூறல்பட்டை, இலவங்கபத்திரி,
இலவங்கப்பட்டை, செவ்வள்ளி, செண்பகப்பூ,
தகரம், [illegible], செங்கழுநீர், கோஷ்டம்,
அக்கராகாரம், மஞ்சிட்டி பலன், மஞ்சள் சந்தனம்,
கத்தக்காசு, வலம்புரிக்காய், வகைக்கு பலம் - 1/4 (17.5)
இவையெல்லாம் ஆவின்பாலால் ஆட்டி முன்பாலில்
அ. கரைத்து எண்ணெயில் அவையெல்லாஞ் சேர்த்து
அடுப்பேற்றி மெழுகு பதம் கண்டு முன்னவைக்கப்
பூசை பண்ணி எண்ணெயை வாங்கி கம்பளியால்
வடிகொண்டு கோரோசனை, கஸ்தூரி, புனுகு
வகைக்கு கழஞ்சு (5.250) விதம் பொடித்திட்டு எண்ணெயில்

போட்டுத் தானியத்தில் வைத்து மூடி மண்டலம்
கால் சென்றால் பின்பு சீயக்காயரைத்துப் பதமாக
முழுகி வரவும். மேகநோவதும், நீர்க்கோவையும்.
எரிச்சல், ஆகிய நோய்கள் தீரும்
(தொடர் ஏடு இல்லை)

57. பீனிசம் 8-க்கும் எண்ணெய்:-

பேய்ச்சுரை வித்து, பேய்ப்பீர்க்கன் வித்து, இரண்டும்
சமன் கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் கரைத்து
விட்டு மெழுகு பதமாக வடித்து தலைக்கிட்டு
முழுகி நாசிக்கு அந்த எண்ணெயை நசியமிடத்
தீராத பீனிசம் தீரும்.

பீனிசத்துக்கு தயிலம்:-

கரிப்பான் சாறு, கானிச் சாறு, சிறுக்கீரைச் சாறு,
காத்தொட்டிச் சாறு, கோரோட்டைப் பழச் சாறு, நாரத்தம்
பழச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, வெற்றிலைச் சாறு
வகைக்குப்படி -¼ சந்தனம், விளாமிச்சம் வேர்,
வகைக்கு பலம் -½, சிறுதேக்கு,
சித்தரத்தை, மிளகு வகைக்கு பலம் -½, சிறுதேக்கு,
தேவதாரம், சிறுநாகப்பூ, செண்பகப்பூ, சதகுப்பை,
மரமஞ்சள், வகைக்கு பலம் -¾ இவைகளை முன்சாறு
நாலாட்டி நல்லெண்ணெய் -படி -2. கூட்டிச்சேர்த்து
அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்து (அஞ்சு நாளைக்
கொருக்கால் முழுகி வரவும்.

58. கொம்பரக்குத் தயிலம் :-

கொம்பரக்கு பலம் - 8 (280 கிராம்) தண்ணீரில் வைத்துப் போட்டு
எட்டில் 1/8 ஒன்றாக்கி, மருதாணிக்குள் வடித்து விட்டு
எள் எண்ணெய் சேர் 5 (1400 கிராம்), தயிர்த் தண்ணீர்
சேர் -1 (280 கிராம்), ஆவின் பால் சேர் -5 (1400 கிராம்), காடித் தண்ணீர் சேர் -5 (1400 கிராம்),
இவையெல்லாம் கியாழத்தில் விட்டு சதகுப்பை,
கருகுரோகணி, கிளியூரல், பூஞ்சாந்து, பச்சைப்
புலாம், செவ்வள்ளி, ஏலம், லவங்கப் பத்திரி, லவங்கத்
தோல், மரமஞ்சள், கோஷ்டம், கஸ்தூரி,
அதிமதுரம், கொந்தம், கிருஷ்ணசீரகம், விறகம், ஏலம்
வகைக்கு கழஞ்சி - ¼, இவைகளை ஆவின் பாலில் அரைத்து
எண்ணெயில் கரைத்துவிட்டு அடுப்பேற்றி,
மெழுகு பதமாக வடித்து முழுக்க பித்த வெட்டை,
அஸ்தி சுரம், தலைமயக்கம், வாயூறல், சுரம்,
கண் வெட்டை, கண் சூடுகள், கண் பாண்டு,
வெள்ளை கருப்புச் சூலை, கர்த்தாள் ரத்தம், குளிர்
நோய், கண்ணில் காசம் இவை தீரும். ஒன்று
விட்டு ஒரு நாள் முழுகி வரவும். பத்தியம்
புளி, புகை, பெண்ணாசை முழுக்க மட்டுமாகவும்.

குறவே துணை.

59.

59. கொம்பரக்குத் தயிலம் :-

நல்லெண்ணெய் படி - 2 [2400மிலி]. தயிர்த் தண்ணீர் படி - 2 [2400மிலி], பசுவின் பால் - 2 [2400மிலி], கொம்பரக்கு பலம் - 2 [2400மிலி] முன்பாலில் அரைத்து வகையாச் சேர்த்து அமுக்கிராவேர், சித்தரமுட்டி வேர், நன்னாரிவேர், வெருகங்கிழங்கு கோரைக்கிழங்கு, வகைக்கு பலம் - 1 [35கி], இவைகளை நசிய யிடித்து இருநாழித் தண்ணீரில் போட்டு எட்டி லொன்றாக்கி முன் வகையாச் சேர்த்து சந்தனம், விலாமிச்சை, மரமஞ்சள், மஞ்சிட்டி, சித்தரத்தை, சதகுப்பை, சடாமாஞ்சி, பூலான் கிழங்கு, வகைக்கு பலம் - 1 [35கி], இவையெல்லாம் முன்பாலாலாட்டி எண்ணெயிற் கரைத்துவிட்டு அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்து மருகலசத்தில் வார்த்துக் கொண்டு முழுகவும். தலைச்சுத்து, மேனிக்கண்ட வியாதிக்கும், உஷ்ண காந்தல், கைகாலசதி, தலைமயக்கம், சிரசில் பார்வையற்றால் இவைகளுக்கு முழுகி வரலாம். நீர்ச்சாதமாகாது. **இறைவே துணை.**

60. பொன்னாங்கண்ணித் தயிலம் :-

காணிச்சாறு படி - 2 [2400மிலி], கரிசாலைச்சாறு படி - 1 [1400மிலி], நெல்லிச்சாறு படி - 1 [1400மிலி], எள்ளெண்ணெய் படி - 2 [2400மிலி], ஆவின் பால் படி - 2 [2400மிலி], அதிமதுரம் பலம் 2 [70கி], ஆவின் பாலிலரைத்து எரித்து மெழுகு பதமாய் ~~காய்~~ வடித்து முழுகி வரவும். நேத்திர நோய் 96-ம் நீர்க்காசம், பித்தம், கிறுகிறுப்பு, உஷ்ணம், கண் புகைச்சல், யாவை தீரும். தலை முழுகினால்

புண், புகை, நீர்ச்சாதம். பகல் நித்திரை யாகாது.

அ. ② இளநீர்த் தயிலம் :-

இளநீர்ச்சார் படி 2 (2800மிலி), ஆவின் பால் படி - 2 (2800மிலி), எள் ளெண்ணெய் படி - 2 (2800மிலி), திரிகடுகு திரிபலாதி, மஞ்சள், சீரகம், கோஷ்டம், அதிமதுரம், பூஞ்சாந்து, ஏலம், பச்சிலை, பூலாங்கிழங்கு வெள்ளைப்புங்கிலி லவங்கப்பட்டை, செவ்வல்லி, அக்கராகாரம், கஸ்தூரி மஞ்சள் லவங்கம், கொத்தம், நெல்லி, சென்பகப்பூ, ஆனைத்திப்பலி, மஞ்சிட்டி, சோம்பு,

61. மஞ்சள் வகைக்கு பலம் 1/2 வீ (17.5) இவையெல்லாம் ஆவின் பாலாலரைத்து எண்ணெயிற் கரைத்துச் சாத்தி சுருக்கி அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்துச் சீசாவில் விட்டு மூடி தானியத்தில் வைத்து மண்டலங் கழிந்தபின்பு எடுத்து தலைக்கு நாளைக்கொரு முறை முழுகி வரவும். மேகம் எண்பது, அஸ்தி வெட்டை, அஸ்தி சுரம், பித்த வாந்தி, மேசுரம், வாண்டு பாண்டுவும், வெறுப்பான தேகம் வண்டு போலாகி செய்து முழுகி வரவும். சிவமயம்.

அ. ⑪ பித்த பிணிசத்துக்கு நெய் - இன்னமொரு சூட்சம்:-

அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், வாயவிளங் கம், சுக்கு, வகைக்கு இரண்டு - காசிடை, பசுவெண்ணெய் படி - (1.4) வீ இவ்வகையைப் பொடித்து நெய்யாலைப் போட்டு மஞ்சள் நீறாக காய்ச்சி இரண்டு வேளையும் அருந்து

தனியாக சேர்க்கில் ஊற்றி வரவும். வழுதிச்சாறு படி - ¼, தாளைவாடுதுச் சாறு படி ¼, ~~அயர்~~ எண்ணெய் படி - ¼ கோரோசனை பணவெடை - 5 (24 வராகன்), குங்குமப்பூ
62. பணவெடை - 3 (14 வராகன்), பூரம் பணவெடை - 3 (14 வராகன்), சாதிலிங்கம் விராகனெடை - 1 (4=2), இவையெல்லாம் பொடி செய்து சின் எண்ணெயிற் போட்டு முன் சாறு வகையும் கூட்ட சேர்த்து அடுப்பேற்றி எண்ணெய் பக்குவமாக்க காச்சி மெழுகு பாகமாக எடுத்து தரையில் வையாமல் முக்காலியில் வைத்து தினமொரு துளியெடுத்து நாசிக்கு நசியம் விடவும். பதினைந்து நாளைக்கு ஒன்றை விட்டு ஒரு நாளைக்கு ஊற்றி வரவும். பீனிசமெல்லாம் தீரும்.

அ. பஞ்ச தீபாக்கினி லேகியம்:-

சுக்கு, மிளகு, ஏலம், நற்சீரகம், கிராம்பு, இந்த மருந்து 5 வகையும் சமன்கொண்டு இவையத்துச் சூரணம் இடிகொண்டு பனைவெல்லம் பாகு செய்து அதில் பொடிவைத்து விராகனிடை - 4 கிண்டி யாக்கி தேன், பசுவின் நெய்யும் விட்டு கிண்டி வைத்துக் கொண்டு அந்தி சந்தி பாக்களவு கொள்ள உஷ்ண வாய்வு, பித்தக்கடுப்பு, இரைச்சல் பேதி, பொருமல், கிராணி, அசீரணம், அஸ்திசுரம், அஸ்தி வெட்டை, விறுவிறுப்பு, வாந்தி யாவை தீரும்.

63. வெட்டை வாயுக்குள் (மருந்து பின்னைநெய்)

இட்சம்:-

பழமிளகு - 33, கொடிக்கள்ளிக் கொழுந்து, எலுமிச்ச சாதிக்காயவை கூட்டியரைத்து அந்தி சந்தி அரைக்கொட்டைப் பாக்களவு கொள்ள பத்தியம் மோரும் சோறும் சாப்பிடவும்.

① புங்கம் பூவை ஒருபடி கொண்டுவந்து சட்டியில்ப் போட்டு அடுப்பேத்தி பூவை முன்னே பொடிக்கக் குத்தப் பின்னாக்கை பசுவெண்ணெய் ரெண்டும் ~~[illegible]~~ தேன் வார்த்து நெய்யெல்லாம் சேரப் பூவில் பிரட்டி வறுத்து வைத்துக் கொண்டு உதயத்துக்கு முன்னே அந்தி சந்தி வெருகடிப் பூவை கொள்ள பத்தியம் புளி புகையிலை, தள்ளு. வெள்ளாட்டு வத்தல், பசுவின் நெய், மோர் யாதும் மிகுதியாகக் கூட்டிக் கொள்ளலாம். யேழு நாளைக்கி இரண்டு நேரமும் சாப்பாட்டு தலை முழுகவும்.

② திசபூபதி சூரணம்:-

சுக்கு, மிளகு, ஓமம், பெருங்காயம், வெங்காரம், கடுகு, இந்துப்பு, கருஞ்சீரகம், திப்பலி, அதவினி கடுக்காய், வசம்பு, வெள்ளுள்ளி, யாவையெல்லாம்
64. சிறிமென் கொண்டு இளவறுத்துச் சூரணித்து வடி கொண்டு இதில் ஒரு வராகனெடை சூரணமெடுத்து நெய்யிலாவது, தேனிலாவது

சீனியுடனாவது இஞ்சி கசாயத்திலாவது கொடுக்க
சூதக் தன்மம், தெரியாத உடல்பிரட்டல், வாய்வு,
கிராணி யாவை தீரும். பத்தியம். இச்சா பத்தியம்.
குருவே துணை.

(1) நீர்க்கட்டுக்கு அனுபானம்:—

விஷ்ணு கிராந்தி கஷாயம் [illegible] அரைத்து
பாலில் சக்கரை போட்டுக் கலக்கி குடிக்க நீர்விடும்.
குருவே துணை.

நீரிழிவுக்கு அனுபானம்:—

கொசுவன் தேன், மெழுகு பலம் -1, பசுவின் நெய்
படி -இ, அதில் போட்டு முருக்கக் காய்ச்சி மூன்று
வறுத்தச் சாமைத்திட்ட பொரி மாவு பண்ணி
வெருகடிப் பிரமாணம் மாவு நெய்யளாவிட்டு
மத்தித்து பணவெடை செந்தூரம் கூட்டி
வைத்து அந்தி சந்தி கொடுக்க. பத்தியம்
மோரும், தயிரும் கூட்டிக் கொள்ளவும்.

65. ரெண்டத்துக்கு வைத்தியம்:—

காந்தம் பலம் -1, அரப்பொடி பலம் -1, அமரிவிட்டி
[illegible] என்பது சாமம் அரைத்து வில்லை
செய்து காயவைத்து புடம்போட்டு எடுத்து புட்டியில்
சிமிழில் அடைத்து கொடுக்க ரெண்டு தீரும்.
சிவமயம்.

சூதக வலிக்கு:-

ஆடுதின்னாப் பாளை நெருங்கி வந்து அரைத்து
எலுமிச்சங்காயளவு உண்டை செய்து
சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளைப் பூண்டு,
இதுநாலும் அரைத்து முன் மருந்தில் மத்தித்துப்
அ. பின்பு பனைவெல்லம் கருக்காய்ப் பிரமாணம் முன்ன
மே வாயிலிப் போட்டு பின்னாலே யிந்தவுண்டை
யைக் ~~[illegible]~~ கொட்டை போலவே உருட்டி
விழுங்கிப் போடவும். இப்படியே அன்னாட்
கள் அரைத்து மூன்று நாளைக்கு காலமே
சாப்பிடவும். பத்தியம் புளி, புகையிலை தள்ள
வும். நாள்நாள் வெந்நீரில் தலை முழுகிப்
புளி, புகையிலை கூட்டவும். இப்படியே
3 கெடுவுக்கு தின்னவும்.

66. கண்ண ரோகத் தயிலம்:-

நொச்சிச் சார், முருங்கை இலைச் சார், உமத்தன்
சார், தேவதாளைச் சார், மஞ்சள் சார், இஞ்சிச் சார்,
வாழைக் கிழங்குச் சார், கிளைப் பனைச் சார்,
தொவ குறும்பைச் சார், வெள்ளுள்ளிச் சார்,
துளசிச் சார், ஆக வகைக்குப் படி -வர, நல்லெண்
ணெய் படி - 2 தனியாய் விட்டு திரிகடுகு
சித்திரமூலம், நாய்க்கடுகு, கோஷ்டம்,
இந்துப்பு, வகைக்கு கழஞ்சு - 1. முன் சார்விட்டு
அரைத்துக் கலக்கி அடுப்பேற்றி பதமாக வடித்து

உச்சியால் தெய்த்துக் காதிலும் விட்டு சீயக்காய் அரைத்து முழுகிவரத் தீரும் வியாதி கண்ணோசை, கன்னப்புத்து, கன்ன சூலை, கிரந்தி, கர்ணதோஷம், விப்புருதி, பிளவை, கன்னரோகம் உ1. எடு ரோகமும், கண்காதில் சீ பொடல் யாவை தீரும். மூணு நாள் பத்தியம் இருக்கவும்.

67. <u>கெண்டை, மகோதரத்துக்கு:-</u>

முடக்கத்தான் சமூலம் பலம் 30. சித்தாமுட்டிவேர் பலம் 15. சித்தாமணக்குவேர், முள்ளிசமூலம், சின்னலவங்கப் பட்டை, சிவதைவேர், செவ்வழுக்கிளிவேர்ப் பட்டை, சவிக்கொடி, செம்முள்ளிக் கொடிவேலிவேர், தேவதாரம், நெருஞ்சிவேர், தண்ணிவிட்டான் கிழங்கு, எருக்கம் வேர், மூக்கரச் சாரணைவேர், வகைக்குப் பலம் - 7கி (26உ கிரா), கொன்னாகனக்கிப் பூப்பு வகைக்குப் பலம் - 3கி, வெல்லம் நசிய யடித்து பானையில் போட்டு வேண்டும் மரக்கால் தண்ணீரை விட்டு எட்டொன்றாக்கி மறு பாண்டத்திலிருத்து கொடிக்கள்ளிப்பால், சதுரக்கள்ளிப்பால், வகைக்கு படி - ¾ பசுவின் பால், தேங்காய்ப்பால், வெளிப்பருத்திச் சார், கும்மட்டிக்காய்ச்சார், நல்லெண்ணெய் வகைக்கு படி-4, யாவை முன் கியாயத்திலிட்டு மூன்று நாளைக்கி வெய்யிலில் ஊறவைத்துத் திரிகடுகு, சித்திரமூலம், சாயசோம்பு, ஏலம், பெருங்காயம், வசம்பு,

ஓமம், கொத்தமல்லி, சதகுப்பை, இந்துப்பு,
வெடியுப்பு, அமுக்கிரான் வேர், அதிமதுரம்,
சடாமாஞ்சி, வாலுளுவை, வெட்பாலை அரிசி
சித்தரத்தை, கண்டந்திப்பிலி, வகைக்கு 5 கிராம் 1 களஞ்சி
எடுத்து அரைத்து வெண்ணெயிற் கரைத்து அஞ்சா
நாள் எடுத்து மெழுகு பதமாக காய்ச்சி வடித்து
சுப்பிரமணியர் பூசை செய்து தேக பலம் பார்த்து
கரண்டி விதம், கொடுக்க. பத்தியம் — கொள்ளுச்சா
உப்பு, புளி, நெய், மோர், கூட்டிக் கொள்ளலாம்.
மகோதரம், அஷ்டகுன்மம், விசபாகம்,
விரை தொண்டை, அக்கை, பெருவயறு கிராணியில்,
விற்புருதி, பாண்டு, இளைப்பு, உதிரக்கட்டு
யாவை தீரும். செவ்வயம். (தொடர் ஏடு இல்லை.) //x

70. பொன்னாங் காணிக் கிருதம்:—

காணிச்சாறு, கையான் சாறு, ஆவின் பால்,
ஆவின் நெய், வகைக்கு பலம் 1, அதிமதுரம்
பலம் 2, ஆவின் பாலில் அரைத்து சாறுகளோ
கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி மெழுகு பதமாகும்
போது சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை,
கல்கண்டு, வகைக்கு 5 கிராம் 1 கழஞ்சு இவை பொடித்துச்
சேர்த்து முன்பாகில் தாவி கிண்டி எடுத்துக்
கரண்டி விதமாக யாறுநேரமும் பனிரெண்டுநாள்
கொள்ள மேலச்சூடு, உஷ்டண நோய், கைகா
லெரிவு, மேகம், வாய் நாற்றம், குடையபாகம்,
உடல் பாரட்டல் இவை தீரும். பத்தியம்

வாய்வு பதார்த்தம் இருபது நாளைக்குத் தள்ளுபடி.
தலைமுழுக்கு வார்த்துச் சோறுக்கால் முழுகவும்.
சிவமயம்.

71. தூதுவளைக் கிருதம்:—

தூதுவளை எடை -1, பொன்முசுட்டை, நன்னாரி, கண்டங்கத்திரி, சிறுசின்னி, ஆடாதோடை, சிறுகாஞ்சொறி, மிளகு, திப்பலி, கடுக்காய் வகைக்கு பலம்-4, [140கி] இவையெல்லாம் நைய இடித்து தண்ணீரில் போட்டு [1/8] எட்டில் ஒன்றாகக் காய்ச்சி ஒரு பாண்டத்தில் வைத்து ஆவின்நெய் படி-2, [2400 மி.லி] ஆவின் பால் படி - 2. [2400 மி.லி] இவையைச் சேர்த்து திரிகடுகு, திரிபலாதி, கோஷ்டம், தாளிசம், அக்கராகாரம், வாய்விளாங்கம், சீரகம், ஓமம், பேரரத்தை, சிற்றரத்தை, வால்மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வகைக்குக் கழஞ்சு- 3. இவையை ஆவின் பாலைவிட்டு நெய்யாலே கரைத்து விட்டு அடுப்பேற்றி மெழுகுபதமாகும் போது வடிகொண்டு தாண்டி இதமாகப் பணிரெண்டு நாள் கொள்ள சயமெட்டு, ஈளை, இருமல், மந்தாகாசம், சேட்டும நோய் தொண்ணூற்றாறும், மேகம், வாய்வு, கிராந்தி யாவை தீரும். பத்தியம் சூடான பதார்த்தம், வாய்வு பதார்த்தம், அவ பத்தியம். மீன், கருவாடு தள்ளவும். சிவமயம்.

72. கண்டங் கத்திரி கிருதம்:—

கண்டங் கத்திரி தாக்கு—1 ½ படி, சிறுவாகை, சிறு
காஞ்சொறி, தூதுவளை, சங்குமூலம், வகைக்கு
பலம்-5, இவற்றை நய்ய இடித்துத் தண்ணீரில்
போட்டு ஒரு பட்டில் ⅛ நாகக் காய்ச்சி ஒரு பாண்டத்தில்
வடித்து ஆவின் பால் படி-2, ஆவின் நெய் படி-2
திரிகடுகு, திரிபலாதி, ஏலம், கோஷ்டம்,
அக்கிராகாரம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி,
தாளிசம், லவங்கப்பட்டை, அரத்தை, சிறுதேக்கு
ஜீரகம், வகைக்கு கழஞ்சு-3, 15.38, யாவையெல்லாம்
ஆவின் பாலில்விட்டு, நெய்யாக கரைத்துவிட்டு
73. மெழுகு பதமாக வடித்து கொண்டு இரை கொள்ள
சயகாசம், வளிப்பாகுவை, வயறு விம்மல், விசகடி,
வெலிகடி; குன்மம் எட்டு, மந்தாரகாசம், சேஷ்டும
நோய், அதிக வாய்வு, இவை தீரும். பத்தியம்
இச்சா பத்தியம். சிவமயம்.

அ. மண்டூர செந்தூரம் — பாண்டுவுக்கு:—

மண்டூரம், கெந்தகம், அரைப்பொடி வகைக்குப்பலம்-
3, யாவை மூன்றும் கல்வத்திலிட்டு சங்கிலைச்
சாற்றில் இரண்டு சாமம் அரைத்து பின் பொடுதலைச்
சாற்றில் இரண்டு சாமம் அரைத்து பின் கரிப்பான்
சாற்றில் அரைத்து பின் வில்லையாய் வைத்து மேல்சட்டி
கொண்டு மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி
நாலு சாமம் எரித்து குளிர ஆறவிட்டு எடுத்து
கருப்புக் கட்டியால் ஒரு பணவெடை செந்தூரம்

கொள்ளா பாண்டு, காமாலை, சோகை. இவை தீரும்
பத்தியம் இல்லை.

74. மயான அண்ட வாதத்துக்கு

[illegible] விதைதன்னோட ——
நேரப் காத்தொட்டி வேரும் கூட்டி
நேர்மையுடன் மிளகு வெங்காயம் கூட்டி
காரப் யாதுகாது மறைத்துக் கொண்டால்
கடிதான அண்டமென்ற வாதந் தீரும்
சாரப் யம்மருந்தை வெளிவிடாதே
சங்கையுட தன்மையில் சார்ந்து நில்லே //

குருவே துணை.

75. பாசாணக் கட்டு :—

பாசாணக் கட்டு வாங்கி சதுரக்கள்ளிப் பாலில் மூணு சாமம் சுருக்குக் கொடுத்து ஆவாரைப் பூவு வேர்ந்து ஒரு பலம் சித்[illegible]டையோடு. இது இரண்டையும் அம்மியிலிட்டு அரைத்து வழுக்க கவசஞ் செய்து யந்த கட்டியை வைத்து ஓடேட்டு கொண்டு சாமம் யெரித்து எரிய ஆறவிட்டுப் பார்க்க உருகிக் கட்டி கட்டிக்கொள்ளும் - யாது யெந்த வியாதிக்கும் உதவும்.

அ. ரச பதங்கம் :—

ரசம் பலம் -1, வெள்ளவங்கம் பலம்-1, கற்பூரசிலா சத்து பலம்-1, இவை மூன்றும் கல்வத்திலிட்டு சுண்ணாம்பு நீர்விட்டு நாலுசாமம் அரைத்து வில்லைதட்டி

காயவைத்து வட்ட ஓட்டுக்குள் வைத்து சீலைமண்
செய்து நாற்பது எருவில் புடமிட்டு எடுத்துக்
கொண்டு மறுபடியும் முன்போலரைத்து முப்பது
எருவில் புடமிட்டு எடுத்து பண வெடை பற்பம்
பணவு கருப்புக் கட்டியால்க் கொள்ள பெரும்பாடு,
குஷ்டம், குன்மம், தினிக்கிராந்தி, சூலை, மேக
வெட்டை, ~~நீகு~~ கால்ப் பிடிப்பு, தாதுநஷ்டம்,
மேக உஷ்ணம் இவைகளுக்கெல்லாம் அனுபானமறிந்து
கொடுக்க வேண்டியது. சிவமயம்.

அ. வெள்வங்க பற்பம்:-

மேற்படி வங்கத்தை புண்ணிய விருட்சத்தின்
பட்டையை தூளாக்கி கோணிப்பட்டியில் கொட்டி
மேற்படி வங்கத்தை புள்ளுக்கு வைத்துச் சுருட்டிக்
கட்டி ஒரு முக்குழியால் அறுபது புடமிட
பற்பம். இது சூடு, வெட்டை, நீர்கடுப்பு, உள்காங்கை
இதுக்குதவும்.

77. தாளக பற்பம்:-

தாளகத்தை சுண்ணாம்புத் தண்ணீரில்ச் சுத்தி பண்ணி
மூக்கரச் சாற்றைச் சார்விட்டு நாலு சாமமரைத்து
வில்லை தட்டி காய வைத்து இச்சிச் சாம்பல் ?
ஒருபடி சட்டியில் போட்டு அதின் மேல் வில்லையை
வைத்து மேசமந்த சாம்பலிட்டு மேல்ச் சட்டி கொண்டு
மூடி ஏடு சீலைமண் செய்து எரித்து சாமம் இரண்டு
பின்பு ஆறவிட்டு பனிரெண்டு சாமம் அரைத்து
வில்லைதட்டி காயவைத்து மூசையில் வைத்து

இலிட்டு சீலைமண் செய்து முப்பது எருவில்
புடம் போட பற்பமாம். சிவமயம்.

அ. நாக பற்பம் :-

நாகம் விராகனெடை 10. (42 கிராம்) ரசம் விராகனெடை 2. (8.4 கி)
இவை இரண்டும் நொறுக்கி அஞ்சு விராகனெடை (21 கிராம்)
வெடியுப்பு போட்டு குரசக் கொட்டைச் சாற்படி 1
தண்ணீர் படி 3, விட்டு ராத்திரி முப்பது ஊறவிட்டு
விடிந்து தண்ணீரை வடித்துப் போட்டு மேல்படி
78. தண்ணீர் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை
தட்டி காய வைத்து வட்ட ஓட்டில் வைத்து
மேலோடு மூடி சீலைமண் செய்து நாற்பது எருவில்
புடம் போடப் பற்பமாம். அதை எடுத்துக்
கொள்ளவும். சிவமயம்.

அ. சீசா பற்பம் :-

சீசா ஒரு உரித்து பழச்சாறு விட்டு நாலுசாமம்
அரைத்து சிறுவில்லை தட்டிக் காய வைத்து
வட்டோட்டில் வைத்து ஒரு முழக்குழி வெட்டி
பாதிக்கி புளியம் பறணை பரப்பி அதின் மேல் ஓட்டை
வைத்து மேலோடு கொண்டு மூடி மேலும் பறணை
பரப்பி எரித்து தீர ஆறவிட்டு எடுத்துக்
கொள்ள பற்பமாம். இது கொடுத்தி தீவிரமே
79. ...... இத்தம், ... மற்றும் ஏயாத விக்கலுக்கு
திரிகடுகு சூரணத்தில் கொடுக்கவும். தேனில்
கொடுக்கவும். சீனியில் கூட்டிக் கொடுக்கவும்.

வெடியுப்பு பற்பம் :- ௯

வெடியுப்பு வாங்கி கிழுகிழுப்பை யிலையால் வைத்து துணி சுத்தி சீலைமண் செய்து நாற்பது யெருவில் புடமிட பற்பமாம்.

அ. கல்லுப்பு பற்பம் :-

கல்லுப்பு வாங்கி அடுப்பக் காயவைத்து தொட்டாச் சிணுங்கி யிலையை அரைத்து கவசஞ் செய்து மேல்படி உப்பை அதற்குள் வைத்து மண்தடவி காயவைத்து மறுநாள் முப்பது யெருவில் புடமிட்டு யெடுத்துக் கொள்ள பற்பமாம். இருக்கு துணை.

௨ ரசக்கட்டு மார்க்கம் :-

சுத்தம் விராகனெடை 16.8.6 -4, பழச்சார் விட்டு நன்றாயரைத்துக் காயவைத்து அந்தப் பொடியை கரண்டியில் போட்டு ரசம் விராகனெடை
80. இரண்டு விட்டு 8.4.6 மேலும் நாலு பழச்சார் விட்டு அனலில் காய்ச்சிக் கொள்ள ரசம் கட்டிக் கொள்ளும். இது மாத்திரை, சன்னி தோஷத்துக்கு அநுபான மறிந்து கொடுக்கவும். சிவமயம்.

இது சுத்தி தோஷத்துக்கும், சன்னிக்கும் :-

லிங்கம், பூரம், சாம்பிராணி. வகைக்கு விராகனெடை 1, மேற்படி பூரமும் சாம்பிராணியும் பொடி செய்து கிலத்தில் லிங்கக்கட்டியை வைத்து அதின் மேல் பொடி மிஞ்சியும் தூவி. தீபம் பொருத்தி

யெரித்த பின்பாடு மேல்படி லிங்கத்தை யெடுத்துக் கருவை வைத்துக் கொள்ளவும். சிவமயம்.

81. படிக்கார பற்பம் :-

செம்முள்ளிங்கி இடித்துச் சாறு வாங்கி ஒரு கல்வத்தில் விட்டு அதில் படிகாரத்தை கட்டியாய் வைத்து கலையத்தை வாக்கில் மேல்ச் சில்லிட்டு சீலைமண் செய்து கெஜபுடமிட பற்பமாம்.

காரீய பற்பம் :-

கத்தரிக்கிழங்கை கொண்டு வந்து மேல்த் தோலை சீவிப் போட்டு அதை இரண்டா யறுத்து பள்ளஞ் செய்து காரீயத்தைக் கட்டி அதில் வைத்து மேலே கிழங்கை மூடி சீலைமண் செய்து கெஜபுடமிட பற்பமாம்.

அ. காந்த பற்பம் :-

காந்தம் விராகனெடை - 3ரூ. லோகம் அரைப்பொடி விராகனெடை - 3ரூ. சூதம் விராகனெடை - உரூ நெல்லிக்காய்; கெந்தகம் விராகனெடை - ரு, இதை யெல்லாம் முருக்கலம் பால்விட்டரைத்து வில்லை தட்டிக் காய வைத்து எருவாலப் புடமிட்டு எடுத்து சம் பட்டைச் சார்விட்டு முன் போலரைத்து வில்லையை செய்து முப்பது எருவில் புடமிட்டு யெடுத்து மறுபடியும் சம் தலைச் சாற்றிலிட்டு முப்பது எருவில்புடமிட பற்பமாம்.

82. <u>வல்லாரைக் கிருதம்:—</u>

வல்லாரைச் சாறு, காணிச்சாறு, பொடுதலைச்சாறு, வகைக்குப் படி -1. பழச்சாறு படி - ௩: ஆவின் பால் படி - ௨. ஆவின் நெய் படி - ௨, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கர்கடக சிங்கி, காட்டாத்திப்பூ, சுக்கு, மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம், வகைக்கு கழஞ்சி - ௨ [10.25], இவைகளை ஆவின் பாலையிட்டு நெய்யால் கரைத்துவிட்டு அடுப்பேற்றி மிளகு பதமாக வடித்து காண்டி நிறை மண்டலம் கால் கொள்ள மேகத்தடிப்பு, வைட்டாணம், கிரந்தி, பிரமேகம் யாவை தீரும்.

ராமசெயம்.

அ. <u>காப்பானுக்கு எண்ணெய்:—</u>

பூவரசு, செங்கத்தாரி, பூத காப்பான் பட்டை, கண்டங்கத்திரி, நிலவாகை, வகைக்கு பலம் - 10, இவைகளை நைய யடித்து தண்ணீரில் போட்டு அட்டெண்ணாக்கி, ஆமணக்கு எண்ணெய் படி - 1 வெள்ளாட்டுப்பால் படி - 1, மிளகு, கருஞ்சீரகம் கருங்கோல், வெள்ளுள்ளி, வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை வகைக்கு கழஞ்சி ௨, இவைகளை முன் பாலாலரைத்துக் கரைத்து
83. எண்ணெயில் விட்டு அடுப்பேற்றி மிளகு பதமாக வடித்து காண்டி நிறை கொள்ள காப்பானென்றது போகும். மேனிப்பு போகும். இந்த எண்ணெயை

விரணத்தின் மேல்த்தடவிப் போட கசகு(ரு)மேல் உதிர்ந்து போம். பத்தியம் புளி, புகையிலை. நெய் வெண்ணெய் சாப்பாட மட்டுக்கு பின் மூன்று நாளைக்கு ஆகாது. தலைமுழுகி அப்புறம் சேர்த்துக் கொள்ளலாம். பயபக்தியாய்ச் சாப்பிடவும்.

அ. வாதத்துக்கு மேல்த்தடவலுக்கு எண்ணெய் :— வம் (படிக்கவும்)

வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புன்னை எண்ணெய், இலுப்பெண்ணெய், வகைக்கு படி-௧, (700 மி.லி) வெள்ளுள்ளி, வசம்பு, காயம், திரிகடுகு, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகுரோகணி, சித்திரமூலம், வகைக்குப் பலம் - ௧, (17 கிராம்) இவை காடியில் அரைத்துக் காடி படி-௨, விட்டு எண்ணெயில் கரைத்து விட்டு அடுப்பேற்றி மெழுகுபதமாக வடித்து மருகலசத்திலிட்டு மேல்பூசி பிடித்து அனலில் காட்ட வாத மேன்பதும், சூலைவகை, பிரவாதம், பிறவிசிவு, நடுக்கல், வாதம், கிறுகிறுப்பு, தேகவலி, இவை தீரும். நிவையம்.

84 ② சன்னிக்கு மனோசிலை எண்ணெய் :—

வேப்பெண்ணெய், படி-1, சுட்டியாசுத்தி ஒரு பலம், பவளக்கால், மனோசிலை பலம் -1, நுணிக்கிப் போட்டு மயில் இறகு கொஞ்சம் நனைக்கி அதில் போட்டுப் பத்த வைத்துக் கிண்டிக் கொஞ்சம் பதமாக வடித்து நேரத்துக்கு ஒரு காண்டி எண்ணெய் கொடுத்துமேலே தடவவும். மூணு நாள் சாப்பாட்டு

சாப்பாட்டு ஆறுநாள் பத்தியம் இருக்கவும்.
7-நாள் பத்தியம் முறித்து யெல்லாஞ் செய்துக்
கொள்ளவும்.

85. சன்னி 18, தயிலம்:—

வேப்பெண்ணெய் படி-1, குதிரைக் குழம்பு,
கழுதைக் குழம்பு, யெருமை, கொம்புத்தாள் வகைக்கு
பலம்-2, கருநாவி, வெள்ளைப் பாஷாணம், வகைக்கு
விராகனெடை-1, ரசம் விராகனெடை-1, சித்தரத்தை
பலம்-1, [illegible] விராகனெடை-2, காயம் விராக
னெடை-2, எருக்கன் கொழுந்து பலம்-1,
வேப்பங் கொழுந்து பலம்-1, யிவைகளை யெருமைப்
பால் விட்டரைத்து யெண்ணெயில் கரைத்து விட்டு
அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்து முன்னே
குழம்பு பொடியை போட்டுக் கிண்டி அந்தக்குழம்பு
பத்தினவுடனே கிண்டி சட்டியாயாக்கி அதுமா
யிருக்கின்ற சட்டியில் வைத்து தண்ணீர் விட்டு
ஆறினவுடனே வடிகட்டி கற்கத்தைத் தள்ளிப்
போட்டு உள்ளுக்கு இரண்டு துண்டி கொடுக்கவும்.
பத்தியம் உப்பு, புளி ஏழு நாளைக்கு ஆகாது.

86. உயிர்ச்சரக்குக்குச் சுத்தி:—

வெள்ளைப் பாஷாணத்துக்குச் சுத்தி:—

அமுரிச்சார் படி-1, உள்ளி, மிளகு பலம்-1,
அரைத்து கலந்து அண்டக் காய்ச்சிட சுத்தியாம்.

வீரத்துக்கு:- நீரில் கற்பூரம் - கழஞ்சி
கட்டி - கடிகை - 3, காச்சி சுத்தியாம்.
பூரத்துக்கு - வெற்றிலை மிளகு, கிசாயஞ் செய்து
கிழிக்கட்டி - 3 நாள் ஊறவும் சுத்தியாம்.
வெள்ளை பாஷாணத்துக்கு:- பன்றிப் பால் நாகம். கடிகை
3, ஊறவும். சுத்தியாம்.
குதிரைப் பாஷாணத்துக்கு:- உமிழ்நீர் விட்டு உரை
வைத்துச் சுத்தியாம். மனோசிலை:- காடிநீரில்
விருக்கவும். கடி - 3 வைக்கச் சுத்தியாம்.
பவளப் புற்றுக்கு:- ஆவின் மோரில் கடிகை-4,
பாசவும் சுத்தியாம். அரிதாரம்:- அமுரிநீரில்
நாழிக்கால், சுண்ணாம்புப் படி - வ, மேனிச்சார் படி - வ, புழச்சார் படி - வ, யாவை கூட்டி கடி
கை - 1, மறுபடி சுத்த செவ்த்திருவர்த்த பின்பு.
புழச்சாற்றில் காச்சினவும்., மறுபடி யெருக்கலம்
87. பாலில் நாழிகை வைத்திருக்க சுத்தியாம். கல்நார:-
கழுதை நீரில் கடிகை - 1, கிழிக்கட்டி வைக்கவும்
சுத்தியாம். கெந்தன் பட்டைக்கு:- கிழித்து கட்டி
பயறு போல் குமிரிச்சார் விட்டு கடிகை - 30
நாளிட்டுச் சுத்தியாம். நீறு:- ஆவின் பாலில்
உரை வைக்க பதினாறு நாழிகை யாருக்கச் சுத்தியாம்.
மொராக்காரம்:- எருமை சாணம் விட்டு சுத்தியாகும்,
எருமை மோர் விட்டு சுத்தியாம்.

காந்தம்:- கோணச்சார் - ௨, உறு விணையும் சுத்தி
யாம். வெங்காரம்:- ஒரு சமுத்திரத்தில் நாள் - ௩.
யாருக்கச் சுத்தியாம். இரசம்:- புகையுறவிடு
மஞ்சள் பொடி, செங்கல் பொடி மூடிப்பூ மறைத்துப்
போட்டு அலகில் மேல் மேனிச்சார், பிரண்டைச்
சார், உமத்தன் சார், தேன், இஞ்சிச் சார்,
ஆவாரப் பட்டை, சித்திரமூலப் பட்டை, திரிபலாதி
இவையைக் கசாயஞ் செய்து அதிலே ரசம்
சுத்தியாம். ~~தைல~~

88. கொட்டைப் பாசாணம்:- முலைப்பாலில், வெள்ளாட்
டுப் பாலில் போட்டு கொட்டியாதார நாழிகை இருக்க
சுத்தியாம். மறுபடி நெல்லில் வைத்திடச் சுத்தியாம்.
விங்கத்துக்கு:- பழச்சார் முலைப்பால், குப்பைமேனிச்
சார் யிவை சமன் கூட்டி சுருக்கிடச் சுத்தியாம்.
இவை நன்றாகச் சுத்தி செய்து கொள்ளவும்.

அ. கண்ட மாலை வாய்ப்புருக்கிக்கு:- (௧)

சித்திரமூல வேர்ப்பட்டை, மாவிலிங்கம் கொழுந்து,
வெற்றிலை, சீரவெங்காயம் வகைக்கு பலம் - ௧
இவை யரைத்து அரைப்படி நல்லெண்ணையிற்
போட்டு இளம் பதமாகக் காய்ச்சி, மூணு நாள் இரு
பொழுது கொடுத்து மூணாநாள் தலை முழுகிட்டு
உப்பு கூட்டிக் கொள்ளவும்.

89. பெரும்பாடுக்கு மருந்து:-

சாஸ்திர பேதி கிராகணை — கி, பசுவின் பால்விட்டு அரைத்து ஆறுபாகம் செய்து ஆறு நேரம் கொடுத்து ஏழு நாள் பத்தியம் இருக்கவும். 9-ம் நாள் தலை முழுகி எல்லாம் சாப்பிட்டுக் கொள்ளவும். பெரும்பாடு, ரத்தம், வயிற்றுவலி கடுப்பு யாவை தீரும்.

அ. சூட்டுக்கு:-

சித்திர மூலப் பட்டையை அரைத்து ஆவின் வெண்ணெயில் சரியிடைப் போட்டுக் கிண்டி வேகவைத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் ஆறு பொழுது கொடுத்து ஏழு நாள் பத்தியம் இருக்கவும். சகல சூடும், வாத சூலை, சூலைக்கட்டு, நீர்க்கடுப்பு, வெட்டை, யாவை தீரும்:

குருவே துணை சிவமயம்.

90. பெரிய மேகத்து எண்ணெய்:-

செம்பொன் திகழ்வானுஞ் சிக்கெனவே படைத்த அம்பரனைப் போற்றி அருட்படைத்து / இன்பமுடன் ஆசான்கள் கற்ற அம்பும் வயித்தியர்கள் பேசி நோய்தீர்க்கும் / பெரியெண்ணெய் நேசமுடன் சொல்லக்கேள் மானிடரே. தாதுவளை கண்டங் காற்ற - ல்லக் கழச்சிவன்ற தேத்தான் கல்லக்கறை நொச்சி சின்னியுடன் காட்டு இஞ்சி செருப்பாதை ரட்சியுடன் செப்பும் பெருவிசுமை

~~பெருவெள்ளை~~ / கோழி அவரை சம்பா
கடலாம் கையான் தக்கரை நீறுலே
நொச்சியுடன் முத்து திருசுங்கி / வெள்ளைக்
செம்பாளை வெண்டிக் குருதாளை
துளசி பேய் மரட்ட பெருமுகட்டை / வெள்ளையா
நவாச
முள்ளஞ்சி பொன்னங் சிறுகருங் சோரி - தவழ
தாழம்பூவா அறுதாந்தி மேவ மருவாலி
அருங் மொளியு மாகண்ணை — பெருகு வெள்ளை
பெருந்தோடை — கருவாக்கு வட்டக்கிளு கிருளை
வாய்த்த சிவன் சம்பட னே ஒட்டுமான
பாற்சினையு மிட்டவந்து கெட்ட - உறவிலியும்
பின்பு வெள்ளைவாய் குத்தக்கு மசாலைகால்
பனை வாலகி கருமித்து சேர்த்த பின்பு
பட்டை வகை செப்பக் கேள் - நீர்க்கடம்பு
போந்த செம்பத்தாளி புல்லுவேர் மதோகதரியே
கொடிபாலை மலிளாலை வண்டு நரி வாகத்தி
செம்புவைந்து பட்டை வகை சேர்த்த பின்பு
மரப்பாலை வாகக் கிழங்கு — னே வெண்டும்
சத்தி சாரணையும் பெருங் நாய்வேளை
பிரண்டை — முருங்கை னே காட்டுக் கரட்டுக்
கரணை கருதுகிளுவை நாட்டுச் சித்திரமேவும்
சிறுநாகம் வகையும் கூட்டுநாம் கிழங்கெடுத்துச்
சேர்த்துக் கொண்ட பதின்மூன்று மூலிகையுடன்

காட்டுல் கிழங்கை கெடுத்துச் சேர்த்துக் கொள்க
பதின்மூன்று முளைகுடன் வாரங்களிடை மூன்றும்
காளை கழுதை ஷத்திச்சார், வெள்ளாட்டுக் கோழி
யமும் மின்னல் கேள். அற்றந்திருகுக்கள்ளி
இழந்த சார் வெற்றியுடன் காலைப்படியாய் சேர்த்துக்
கறுதும் விளக்கெண்ணெய் யதுயேற்றும் பழ
தாளிறு மூக்கால் தீர்க்கடை மருந்து சக்கு
கருகு ரோகங்களையும் வருவாத்தை கலத்தாள்
மருந்து அடங்கும் திப்பலி திமோலமேலம்
தேசாபுரம், யேலம், செப்புல் ஒருக்காயுல்
கருஞ்சீரகமும் சேர்ப் வாமயிய வெல்லம்
மும் இடம் வாளவிரும் சதுரவையுடன்
சிந்தைமகிழ் கோரோசினை யுடனே
வாத்தைநிதி பூதசாரப்பான் கட்டளை
போற்றும் பதினால் வகையு. இதுடனே
ரெண்டு வாரங்களிடை ஆதரிய செவ்கொட்டை
காபலமும் சேர் பாலகிப் பட்டை யதுபாலுடனே
சா பாலுடனே ரண்டுபலரு சேர்த்து
ஒருக்கும் அரைப்பொடி வாரங்களிடை அம்புதின்
சாற்றிலரை பொடியதாக வரைத்து மறுபடியும்
பட்டைவகை மற்றவகை பட்சிலைச் சாறா
லரைத்து இஷ்டமுடன் யெண்ணெய் தனிலிட்
டன்பு

சட்டி அருமைபொத்திக் காறு வைத்து
அன்பாய் பக்குவத்தில் வைத்துப் பானை தண்ணாயிக்க
சொறுக்கால் கையிகால் வீசும் வளியெண்ணெய்க் காண
கொடுத்தக்கால் மாவிசும் நோய் வினைகள்

94. மாறும் வகை நால்தேசம் தன்னிலுள்ள பண்பு தனைச் சாற்றக் கேள்
வாதமதும் யெண்ணரிய வெண்பதும் வன்னினை
கிராந்தி புண் தராப்பான் மேகநோய், அண்ட
வாத குன்மம் சொன்ன கெர்ப்பந் தன்னாலும்
பாலன் பிறந்து மரிப்பதுவும் தனந்தனில்
பண்ணிநகில் நோய்க்கு யென்ற கருத்தால்
கொடுக்க உண்டு. சமுத்திரத்தி லொருவருடம்
பண்ணும் கெர்ப்பம் மூன்றும் மாச தொணூரம் மூன்று
மந்தான மாசத்திலும் தோன்றும் பின்ற மாசம்
தோயித்திடவே ஒன்றும் கெடு மூன்றும் நாளும்
கொடுத்து பூசமதில் பத்தியங்கள் ஆற்ற உப்பு
மூன்று நாளாக தோன்றும் மறுபத்தியத்தில் வறுத்த
உப்பு கூட்டி பொரமன்னால் பாணி நாளும்

திருவேத்தனை தெண்டாயுதபாணி

95. நிலப்பனைக் கிருதம் :- (உ)

நிலப்பனைக் கிழங்கு, ஆதியம்பட்டை, கருங்காலி
நாகப்பட்டை, அரசன் பட்டை வகைக்கு பலம்
நய்ய யடித்து இருநாழி நீரில் போட்டு
சேர்ச்சேத்து நொன்றாகக் காச்சியபின் ஆவின்நெய்
படி உ, புளியாரைச் சார், கோரையுடன்
தண்டுச் சார் வகைக்கு படி-1, பொன் சேட்டை
. . . . சொரிவாலா வர்த்து. கொத்தமல்லி,

அ. திரிகடுகு, திரிபலாதி, நெருஞ்சி, மாதுளங்கை,
கிருகடகம், மரம்பசைப்பு, அரத்தை, காட்டாத்தி,
நெல்லி, அதிமதுரம், ஜாவாத்திரி
பிசுகம், மாதளையின் பருப்பு, சந்தனம், சாத்திர
பேதி, புளியாரைத் தேனல். முத்தக்காசு, திராக்ஷ

96. அலங்கப் பட்டை, கோசனை, யோமம், திராட்சை
வெள்ளை அமுக்கராங்வேர், வகைக்கு பலம்
கழஞ்சு கிச்சதும் ஆவின் பாலாரைத்து நெய்யாலே
கரைத்துவிட்டு அரைப்பேத்தி நமருகு பதமாக
வடிகொண்டு பரணி சேர்த்து யாரு ஈராழம்
காய்ச்சி கொள்ள தீரும் வயாதி. பெரும்
பாண்டு, எரும்புருக்கி, விஷமேகங்கள், கிரானி
வகை மேகம், உடல் சுடலம் வெருப்பு,
கைகால் காந்தல், தூலை, வெறிப்பு, நீர்க்கடுப்பு
யாவை தீரும். தேகம் செவ்ட்டையாய் கொள்ளும்
பத்தியங்கள். சிவமயம். திருவே துணை.

97. லவங்காதிச் சூரணம்:—

லவங்கம் -1, மிளகு - 2, நாககேசரம் - 4 8

க...கசிறு - 16. சுக்கு - 32. ஏலம் - 64,

இவை ஒன்றாய்ச் சேர்த்து, சூரணஞ் செய்து சீனிசமன் கூட்டிக் கலந்து புதுக்கலசத்தில் வைத்துக் கொண்டு திரிகடிப் (1கிராம்) பிரமாணம் இருநேரமும் காலை மாலை கொள்ள பித்த வாய்வு, கிராந்திரணம், மேஜூரல், சொறி சிரங்கு, அரிகிராந்தி, சில் விஷ தூலை, பெரும்பாடு ஜுரம் புளிக்கி, யாவும் தீரும். குருவே துணை.

திப்பிலி ரசாயனம்:—

திப்பிலி பலம் 10, மிளகு - 5, திப்பிலி கட்டை - 5, சீரகம், ஓமம், ரெண்டும், அரத்தை - 2, லவங்கப் பட்டை, தாளிசம், லவங்க பத்திரி, திரிபலாதி, கிராம்பு, ஏலம், கொடிவேலி வேர்ப் பட்டை வகைக்கு பலம் -1 இவை ஒன்றாய்ச் சேர்த்து சூரணித்து சீனி சமன் கூட்டி தேன் விட்டுப் பிசைந்து திரிகடி (1கிராம்) பிரமாணம் கூட்டி இருநேரமும் 12 நாள் கொள்ள பாண்டு, ஈளை, காசம், சேத்தும நோய், உதிரவாய்வு யாவும் தீரும்.

இக்கட்டுரையை, வழிநடை சரிபார்த்து, புத்தகம் ஒருமான் அப்படியே
அச்சுக்கு வழங்கலாம்

[illegible]